REGD. M. 4642.

# திராவிடநாடு

மலர் 6 | 14–9–47 | இதழ் 16

(கவிதைக் கதை)

## விதிப்படி தானே?

[தமிழ் முத்து]

"ஐயா! என்னுடை யருமைச் சிறுவன்
நோயால் மடியும் நிலையினன், மனைவி
'வடிவேல் முருகா! முடிகொடுக் கின்றேன்,
சடுதியில் நோயைச் சரியாக் கிடுவாய்!'
என்றுகும் பிட்டும் அதிகரித் தின்று
ஜன்னிகண் டுள்ளது என்னநான் செய்வேன்,
பணமோ இல்லை! வைத்தியர் வந்தால்
குணமா கும்எனக் கூறுகின் றார்கள்.
உதவியைப் புரிந்தேன் புதல்வனைக் காப்பீர்!"
முருகனிதை முறையிட, முதலாளி முதலியார்
கூசா துரைத்தார் "எதற்கடா வைத்தியர்?
பூசாரி யேதையும் மந்திரித் தோட்டுவான்!
ஏகிவே லாண்டியை யழைத்துமந் திரித்திடு!
வேகமாய்ச் சென்றிடு விதிப்படி நடந்திடும்!"
இந்தச்சொல் கேட்டுப்பின் ஏகினன் முருகனும்
மந்திரம் முடிந்தது மகவதும் மடிந்தது!
முதலியார் இதையறிந் "தெல்லா மவரவர்
விதிப்படி தானடா நடந்திடும்" என்றார்!

* * *

அகன்றன நாட்கள். ஆனால் முருகனின்
அகத்தின் குமுறலும், உழைப்பின் துன்பமும்
நீங்கவே யில்லை! முதலியார் அவர்தம்
பாங்குறு புதல்வனுக் காகவே வைத்தியர்
நகரத்திருந்து நிதமும் வருவார்!
மிகுந்த நோயால் ஜன்னியே கண்டதால்,
முதலியார் முருகனுக் "கேகிவைத்தியர்தமை,
முதலிலே அழைத்துவா" எனஉரைத்திட்டார்!
சற்றுநே ரத்தினில் உடன்வே லாண்டியோ
டேற்றனன், வந்து அவ்விடம் முருகன்!
இதைநோக் கிச்சினக் கனற்பொறி சிந்த
வைத்யரை யழைக்க வைது அனுப்பினார்!
ஆயினும் அதுவரை அவர்மகன் ஆவி
நோயுடல் தன்னில் நிலைத்திட வில்லை!
மகன்பிரி வாற்றா தகம்நொந் தழுதார்!
பிறகுவந் துற்ற முருகனைச் சினந்தார்!
அதற்கவன் உரைத்தான் "யாவும்
விதிப்படி தானே, வீண்வருத்தம் ஏன்?"

4-ம் பக்கத் தொடர்ச்சி

யில், 'உனக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை' என்று கூறுவது, அது, கண்ணுதலார் (சிவன்) வாழும் கயிலை நாட்டுப் பண்பாய் இருந்தாலும் கடிந்து ஒதுக்கப்படும் என்க.

இனி, அகத்தியரைக் கண்டு அவருடன் சில நாள் தங்குவதையே குறிக்கோளாகக் கொண்டு கயிலையை விட்டுப் புறப்பட்ட அந்த அட்டமா சித்தியார், வழியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட 'இடுக்கண்ணை'க் களைந்த பின்னராவது, தம்முடைய குறிக்கோளை நிறைவேற்றினாரா என்று பார்த்தால், அதுவும் இல்லையே! "அகத்தியரைக் காணப்புறப் பட்டோம்; வழியில் இந்த 'இடுக்கண்' ஏற்பட்டது; அதனைக் களைந் தோம்; இனி அகத்தியரைச் சென்று காண்போம்; அதுவே நமது குறிக்கோள்" என்று எண்ணி அந்தச் சிவ யோகியார் நடந்து கொண்டார் என்ற முறையிலும் கதை அமையாமல் இன்னொரு விதமாகவுமன்றோ கதை மாறுகின்றது.

ஒருகால், இடையனாக மாறிய அதே வடிவத்தோடு, அகத்தியரைக் காணச் சென்றால், அவர், "யார் நீர்? ஏன் இங்கு வந்தீர்? வெளியே போ!" என்று சொல்லி விட்டால் என்ன செய்வது? அதனையும் மீறித், தாம் இன்னார் என்பதை விளக்கிக் கூறினாலும், "உம்மைப் போன்ற ஒரு ஆளை நான் கயிலாயத்தில் இருந்த காலத்தில் பார்த்ததில்லையே!" என்று கூறித் தம்மை அவர் வரவேற்க மறுத்து விட்டால் அதற்கு என்ன செய்வது? என்று கருதியோ என்னவோ, கதையில் மாற்றம் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, இடையனாக மாறிய திருவிளையாடல் முடிந்ததும், அந்த இடைக்கோலயோகியார், திருவாவடுதுறை என்னும் ஊருக்குச் சென்று, அங்குள்ள ஒரு அரசமரத்தடியில் மூவாயிரம் ஆண்டுகள் தங்கி, ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் திருமந்திரங்களைப் பாடி முடித்துவிட்டுப் பழையபடியும் கயிலைக்குப் போய்விட்டார் என்றே கதையில் மாற்றம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இனித், திருமூலர் மூவாயிரம் பாடல்கள் பாடினார் என்பது ஒப்புக் கொள்ளக்கூடியதாயினும், அவர் மூவாயிரம் ஆண்டு உயிரோடு இருந்தார் என்பதில், சைவ அன்பர்களுக்குள்ளேயே கருத்துவேறுபாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. "திருமூலர் ஒவ்வோராண்டுக்குஒவ்வொரு மந்திரமாக மூவாயிரம் ஆண்டிருந்து மூவாயிரம் மந்திரம் சொன்னார் என்பதற்கு அகச்சான்றில்லை. திருமூலர் நீண்டகாலம் உயிரோடு இருந்தார் என்பதுமட்டும் விளங்குகிறது. ஆண்டு என்பதற்குஅந்நாளில் வேறுபொருள் வழங்கிவந்ததோ என்னவோ தெரியவில்லை" என்று பெரிய புராணப் பொழிப்புரை ஆசிரியர் திரு. வி. க. கூறுகிறார்.

சைவஅன்பர்கள், பொதுவாகவே தங்கள் சமயத்தை நிலை நாட்டுவதற்காக, இல்லாததையும்—இருக்கமுடியாததையும் எடுத்துக்கட்டிப் புனைந்து கூறுவதில் பின்வாங்குவதில்லை. அப்படியிருந்தும், அவர்களின் குரு—ஆசிரியர் போன்றவர்களால் கூறப்படும் கருத்துக்களில் ஒருவருக்கொருவர் மாறுபட்டு, அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில் மதில்மேற்பூனை போன்றமுறையை மேற்கொள்வார்களானால், அக்கருத்துக்கள் முற்றிலும் வடிகட்டிய முழுப்பொய்யாகும் என்பதையே எடுத்துக்காட்டுவதாகும். எனவே, திருமூலர் மூவாயிரம்ஆண்டுகள் உயிரோடிருந்துதான் மூவாயிரம்பாடல்களைப்பாடினார்என்பதும், கயிலையில்இருந்துவந்த சிவ யோகியார் கூடுவிட்டுக் கூடு பாயும் சித்தியால் இடையனாக மாறினார் என்பதும், அவர் அகத்தியரைக் கண்டு அவருடன் சிலநாள் தங்க வேட்கைகொண்டு கயிலையில்இருந்து புறப்பட்டார் என்பதுமான நிகழ்ச்சிகள், பெரிய புராணம் என்ற ஒரு நூலை உண்டாக்கி, அதன் வாயிலாகச் சைவத்தை நிலைநாட்ட முயன்றவர்களால் கட்டிப்புனைந்து கூறப்பட்டவையாகும் என்று நாம் கூறுகின்றோம். இது குற்றமா?

## திருமணம்.

நடிப்பு, இசை இவற்றுள் புகழ் பெற்ற சிதம்பரம் தோழர் C. S. ஜெயராமனுக்கும் தோழியர் தங்கப்பாப்பாவுக்கும் 22-8-47ல் தஞ்சாவூரில், கிருஷ்ணன் நாடக சபையார் தங்கியிருக்கும் வீட்டில் சீர்திருத்தத் திருமணம் சிறப்புடன் நடந்தது.

கலைவாணர் தோழர் N. S. கிருஷ்ணன் திருமணத்தை நடத்திவைத்ததுடன் மணமகளுக்கு ஒரு வைரத் தோடாவை அன்பாக அளித்தார்.

தோழர் K. R. இராமசாமியால் 1000 ரூபாய் மதிப்புள்ள ஒரு மோதிரமும், தோழியர் T. A. மதுரம் அம்மையாரால் வெள்ளிக் கூஜா ஒன்றும், மற்றும் பலரால் பல பரிசுகளும் மணமகனுக்கு வழங்கப்பட்டன.

மாலை, இசையரசு தண்டபாணி தேசிகரின் இன்னிசை அரங்குடன் மணம் இனிது முடிந்தது.

**20—9—47 சனிக்கிழமை இரவு 9-30 மணிக்கு**

**வாலாஜாபாத் ராஜா டாக்கீசில்**

வாலாஜாபாத் உயர்நிலைப்பள்ளிக்கட்டட நிதிக்காக

பூம்பாவை புகழ் **கே. ஆர். இராமசாமி**

அவர்கள் தலைமையில்

**தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ.,**

அவர்களும் மற்றும் பலரும் நடிக்கும்,

**"நீதிதேவன் மயக்கம்"**

நாடகம் நடைபெறும்,

டிக்கட் விபரம் :— ரூ. 10, 5, 3, 2.

டிக்கட் கிடைக்குமிடம்:— தமிழர் உணவு விடுதி, செங்கல்பட்டு.

ராஜா டாக்கீஸ், வாலாஜாபாத்.

திராவிடநாடு ஆபீஸ், காஞ்சிபுரம்.

தேவராசன், 182, கோவிந்தப்பநாய்க்கன் தெரு, G. T. மதராஸ்

C. P. இராசமாணிக்கம், இரும்புக்கடை, பெரியகாஞ்சிபுரம்.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா

திராவிடநாடு

ஆண்டுசந்தா ரூ 7

# கூடுவிட்டுக் கூடு பாய்வதாம்!

[நக்கீரன்]

எண்பெரும் வல்லமைகளை (அட்டமா சித்திகள்) எம்பிரான் அருளால் எளிதாகப் பெற்று எல்லையற்ற பேரின்பத்தை நுகர்ந்துகொண்டு கைலையில் இருந்த ஒரு சிவயோகியாருக்கு, அகத்தியருடன் சிலநாள் தங்குதல் வேண்டுமென்ற வேட்கை எழுந்ததென்பதாகச் சேக்கிழார்கூறியுள்ளார். சேக்கிழார் கூறியுள்ள இச்செய்தி, ஒருவியப்புக்குரிய நிகழ்ச்சியாக இருக்கிறதே என்று சிலர்,ஏன்? சிவ அன்பர்கள் எல்லாருமே கருதுவர். ஏனென்றால், நிலையற்றதும், பயனற்றதும், என்று 'சமய' அன்பர்களால் சாற்றப்படும் சிற்றின்பத்தை நுகர்ந்து சீரழிவதற்கு இடமாகவுள்ள இந்நிலவுலகிற்கு, எல்லையில் பேரின்பத்தை நுகர்ந்து என்றுமழியாப்பெருவாழ்வுக்கு இடமாகவுள்ள கைலையில் இருக்கும் ஒரு சிவயோகியார் வந்தார் என்பதாகக் கூறப்படுவதைச் சைவத்தைச், சார்ந்த சகலருமே சாடுவர். சேக்கிழார் செப்பினூர் என்பதற்காகச், சைவக்கொள்கைக்கே மாறுபட்ட ஒரு கருத்தை ஆதரிப்பதா என்றுகூடச் சில சைவ மெய்யன்பர்கள் கருதி அவரைக் காய்வர். அதிலும், அரனருளால் அட்டமா சித்திகளை அடைந்த ஒரு அடியவர் திலகம், அமரவாழ்வை விரும்பாமல், அவனி புக்காரென்று கூறப்படுவதை எந்தச்சமய அன்பரும்ஒப்புக்கொள்ளவேமாட்டார்கள். பூலோகத்தை விட்டுக் கயிலாயம் செல்வதையே புனிதம்-புண்ணியம் என்று கூறப்படும் ஒரு புராணத்திலேயே, கயிலாயத்தில் இருக்கும் ஒருவர் பூலோகத்திற்குப் புறப்பட்டார் என்று கூறப்படுமானல், அத்தகைய புராணத்தை ஆதரிப்பது ஆத்திகமாகாதே என்றுகூடப் புராண அன்பர்கள் புகல்வர். இதுமட்டுமன்று, கயிலாயத்தில் இல்லாத ஏதோ ஒன்று பூலோகத்தில் இருப்பதாகவும், அதனைத்தாம் எப்படியும் பார்த்தாக வேண்டுமென்ற வேட்கையோடு புறப்பட்டதாகவும் கூறப்படுவது கயிலாயத்தையும், அங்குள்ளோரையும் வேண்டுமென்றேஇழிவுபடுத்தும் ஒரு விரும்பத்தகாத காரியம் என்றும் கண்ணுதல்அன்பர்கள் கருதுவர்.

இனிக், கயிலாயத்தில் இருந்த சிவயோகியார் பூலோகத்திற்குப் புறப்பட்டதற்குக் காரணம், பூலோகத்திலுள்ள பொதிகை மலையில் வாழும் அகத்தியருடன் சிலநாள் தங்குதல் வேண்டும் என்னும் வேட்கையேயாகும். இந்த வேட்கை அந்தச்சிவயோகியாருக்கு ஏற்பட்டதற்குக்காரணம் யாதாயினும் இருக்கவேண்டுமன்றே! 'இன்ன காரியத்திற்காக இன்னவரைப் பார்க்கப்போகிறேன்' என்று இருப்பதுதானே இயல்பு. ஆனல், இங்கு பேசப்படும் கயிலைச் சிவயோகியார், பொதிகை அகத்தியாரைக் காணச்சென்றதற்குரிய காரணம் எதுவும் சேக்கிழாரால் கூறப்படவில்லை. கயிலையில், காரணமின்றியே காரியங்கள் நிகழ்வன போலும்! அப்படியும் சொல்வதற்கில்லையே! முன்பொருகாலத்தில்(எப்பொழுதென்று என்னைக்கேட்காதீர்கள்) கயிலையில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் பார்வதி — பரமசிவன் திருமணத்திற்குப் பூலோகத்திலுள்ளவர்களும், ஏனை உலகங்களிலுள்ளவர்களும் கயிலையில் போய் குழுமிவிட்ட காரணத்தால், வடகோடு (கயிலை) தாழவும்,தென்கோடு (பூலோகம்) உயரவும் ஆன நிலைமை ஏற்பட்டது. அப்போது, சிவன், அகத்தியரை நோக்கி, "நீர் தென்திசை சென்று, அங்கு தங்கி இந்த உயர்வு தாழ்வைச் சமப்படுத்துவீராக" என்று கட்டளையிட்டதாகவும், அதன்படியே அகத்தியர், வடகோடு விட்டுப்பெயர்ந்து, தென்கோடு சென்று தங்கி அந்தக்காரியத்தைச் செய்து முடித்ததாகவும் ஒரு புராணத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனல், இந்தச்செய்தி உண்மையா? பொய்யா? இப்படி நடந்திருக்குமா? முடியுமா என்பது குறித்து ஆராய்வது மிக மிக இன்றியமையாதது தான் என்றாலும், கயிலையில் இருந்த அகத்தியர், பூலோகத்திற்கு வருவதற்கு ஒருகாரணம் (அதுபொய்யோ மெய்யோ) கூறப்பட்டதுபோல், கயிலையில் இருந்த சிவயோகியார், அகத்தியரைக் காணப் பொதிகை சென்றார் என்பதற்கும் யாதாயினும் ஒரு காரணம், அகத்தியருக்கோ அல்லது அந்தச்சிவயோகியாருக்கோதான் திருமணம் என்ற முறையிலோ அன்றி வேறெதற்காகவேனுமோ என்றாவது இருத்தல் வேண்டுமே! அங்ஙனம், காரணம் எதுவுமின்றிக், கயிலையில் இருந்த ஒருவர், பொதிகையில் இருந்த ஒருவரைக் காணச் சென்றார் என்று வறிதே கூறுவது, ஏதாவதொரு கதையை உருவாக்குவதற்காக வலிந்து கட்டிப் புனையப்படும் ஒரு வரட்டுக் காரணமாகுமேயன்றி, * அதன்கண் பெறப்படும் உண்மை யாதுமில்லை என்க.

இனி, அந்தச் சிவயோகியார், தாம் எண்ணியபடி தம்முடைய வேட்கையை முடித்துக்கொண்டாரா என்று பார்த்தால், அதுவும் இல்லையே! கயிலையை விட்டுப் புறப்பட்ட அந்த முனிவர் காட்டு வழியாக வரும்போது, அங்கே ஒரு இடையன் மாண்டு கிடந்ததைக் கண்டு, தம்முடைய உடம்பிலுள்ள

உயிரை அந்தப் பிணத்தினுள் நுழையும்படி செய்து இடையனாக மாறினார் என்றன்றோ கதையும் மாறுகின்றது. எனவே, கதை மாறுபடுவதைப் பற்றியோ, திரித்துக் கூறப்படுவதைப் பற்றியோ நாம் கவலைப்படாவிட்டாலும், மாற்றியும் திரித்தும் கூறப்படும் கதையில் காணப்படும் நிகழ்ச்சிகளையாவது ஆராய்ந்து அவற்றின்கண் புதைந்து கிடக்கும் உண்மைகளை விளக்கவேண்டுமென்ற வேட்கை எழுகின்றது.

எனவே, மாண்டு கிடந்த இடையனுடைய உடலில், தம்முடைய உயிரை நுழைத்தார் அந்தச் சிவயோகியார் என்பதை நோக்கும்போது, அந்த அற்புதத்தைத் தம்முடைய அட்டமாசித்திகளின் ஆற்றல் கொண்டே செய்திருப்பார் என்று எண்ணினேன். ஆனால், அந்த எண்ணத்தில் மண்ணைத்தூவின அட்டமா சித்திகள். எங்களிடம் அந்தகைய ஆற்றல் இல்லையென்று, தத்தம் சித்தின் திறமையைத் தெளிவுபடக்கூறி விட்டன. சிறிய வடிவம் கொள்வோம்–பெரிய வடிவம்கொள்வோம்—லகுவாய் இருப்போம்—கனமாய் இருப்போம் — எங்கும் போய் எல்லா வளங்களையும் பெறுவோம் — ஓரிடத்தில் இருந்தபடியே எல்லாவற்றையும் பெறுவோம்—கடவுளைப்போல் முத்தொழில் செய்வோம்—எவரும் பணிகேட்ப நிற்போம் — எவ்வுயிரையும் எம்வயப்படுத்துவோம்; ஆனால் கூடுவிட்டுக் கூடுபாயும் தொழிலை நாங்கள் செய்யவே முடியாதென்று முடிவாகக் கூறிவிட்டன. இவர்கள் இப்படிக் கூறிவிட்டார்களே என்பதற்காக நானும் வாளா இருந்துவிடவில்லை. ஒவ்வொரு சித்தியின் விளக்கத்தையும் எடுத்துவைத்துக்கொண்டு, அதனுள் எங்காவது, மறைபொருளாகவாவது கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை கூறப்பட்டிருக்கிறதா என்று துருவித் துருவி ஆராய்ந்து பார்த்தேன்; அலுத்தேன். ஆனால் "சேக்கிழார் மட்டும்,

"பவனவழி அவனுடலில்
தம்முயிரைப் பாய்த்தினார்"

என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார், அதாவது, சிவயோகியார், தம்முடைய உயிரை இடையனுடைய உடலில் நுழைத்தார்என்று கூறியுள்ளார். சேக்கிழார் இவ்வாறு கூறிருப்பதனால், ஒருகால், அந்தச் சிவயோகியாருக்கு அட்டமாசித்திகளோடு கூடுவிட்டுக் கூடுபாயும் ஒரு சித்தியும் தெரிந்திருக்கலாமோ என்று கூட நினைத்தேன். ஆனால், பெரிய புராணத்தை விரித்தெழுதிய திரு. வி. கலியாணசுந்தரனார் அதற்கும் இடம் தரவில்லை. அவர்,

"காயாதிபூதங்கலைகாயைமாயையில், ஆயாதகலஅறிவொன்றறிதியே, ஓயாப் பதியதன் உண்மையைக் கூடினால், வீயாப் பரகாயம் மேவலுமாமே"

என்ற திருமந்திரப் பாடலை எடுத்துக் காட்டி, அட்டமா சித்திகளுக்குள்ளேயே கூடுவிட்டுக் கூடுபாயும் ஆற்றலும் அடங்கிக்கிடக்கிறதென்று தம்முடைய ஆராய்ச்சிக் குறிப்பில் கூறியுள்ளார். இவர்கள் கூறும் இவ்விரு விளக்கங்களையும் எடுத்துவைத்துக்கொண்டு மீண்டும் ஒரு முறை அட்டமா சித்திகளை அலசி அலசிப் பார்த்தேன், 'இல்லாத ஒன்றை—இருக்க முடியாத ஒன்றை, இருப்பதாகவும் — இருக்கமுடியுமென்றும் இடுப்பொடிந்த அறிவினர் இயம்பியதை வைத்துக் கொண்டு இன்னல் படாதே' என்றுகூறி, என்னை அந்த வழியினின்றும் வேறு வழிக்குத் திருப்பி விட்டது என்னுடையபகுத்தறிவு.

இனி, இறந்த உடலில்தம்முடைய உயிரை நுழைத்து இடையனாக மாறிய அந்தச்சிவயோகியார், இடையனாகவாவது நடித்தாரா என்று பார்த்தால், அதுவும் இல்லை. பசு நிரைகள், அதனதன் வீடு போய்ச் சேரும் வரையில்தான், அவருடைய இடையன்வேலை இருந்தது, 'மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இடையன் இறந்துவிட்டான்; மாடுகள் தனியே காட்டில் நிற்கின்றன; இவைகளை ஓட்டிக்கொண்டு போய் அதனதன் வீடுகளில் சேர்ப்பது என் கடமை' என்ற அளவோடு, அவர், தாம் மேற்கொண்ட அந்த மேய்ப்பான் பணியை முடித்துக் கொண்டார்.

தங்கள் மேய்ப்பான் இறந்துபட்டதால், காட்டில் கலங்கிக்கொண்டு நின்ற மாடுகளின் இரங்கத் தக்க நிலையைக் கண்டு, அதனை மாற்றுவதற்காகவா, ஒருவர் தம்முடைய உயிரை இன்னொருவருடைய உடலில் நுழைக்க வேண்டும்? மாலைப் பொழுதானதும், மாடுகள் வழக்கம் போல், தத்தம் வீடுகளை நோக்கிச் செல்லும்; ஒருகால் மாடுகளுக்குத் தங்கள் மேய்ப்பானிடம்அளவுகடந்த அன்பிருந்து, அவனைப் பிரியமுடியாது காட்டிலேயே தங்கிவிட்டாலும், மாட்டுடையவர்கள் யாராவது ஒருவர் வந்து, அவைகளைப்பற்றிச் செல்வர். அதுமட்டுமன்று, இடையன் மாண்டான் என்ற 'இழவு'ச் செய்தியையும் இடையன் உறவினருக்குக் கூறியுமிருப்பர். இந்த இன்றியமையாத பணியையாவது அந்த இடையன்வடிவம் செய்ததோ என்றால், இல்லை. இடையன் மனைவி, தன்கணவன் வராமை கண்டு வருந்தித் தெருவில் வந்து தேடிப்பார்க்கையில்தெருக்கோடியில் நின்று கொண்டிருந்த ,தன்கணவனை' அணுகி, "என் இங்கு நிற்கிறீர்? யாதாயினும் தீட்டோ" என்று கேட்டாள். அதற்கு அவர், "எனக்கும் உனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை" என்று கூறிவிட்டார். இதற்குமுன், சிறிதளவு தானும் மனத்தாங்கல் இல்லாது அன்பாய் இருந்த தன் கணவன், திடீரென்று 'எனக்கும் உனக்கும் எவ்விதத்தொடர்புமில்லை' என்று கூறிவிட்டால், அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை, மாடுகளின் கலக்கத்தைக் கண்டு 'இரங்கிய' அந்தக் கயிலை முனிவர் அறியமுடியாது போனது வியப்பிலும் வியப்பே. மாடுகளின் மனக் கலக்கத்தை அறிந்துகொள்ள முடிந்த அந்த மாமுனிவருக்கு மக்களின் மனக்கலக்கத்தை அறிய முடியாதது, கயிலை நாட்டுப் பண்பு போலும்!

இனி, இடையன் உடலில் தம்முடைய உயிரை நுழைத்து இடையனாக மாறிய அந்த முனிவர், ஒருகால், 'நான் உண்மையான இடையன் அல்லவே; உடல் மட்டும் அவனுடையது; உயிர் வேறுயிற்றே; இந்த நிலையில் நான்தான் உன்னுடைய கணவன்' என்று கூறி அவளுடன் வாழ்க்கை நடத்துவது முறையற்ற செயலாகும் என்று கருதியிருப்பாரானால், அது தமிழர் பண்புப்படி வரவேற்கக் கூடியதானாலும், அந்த முனிவர், காட்டில் நிகழ்ந்த உண்மைகளை அவளுக்கு எடுத்துக் கூறித் தான் அவளுடைய, உண்மையான—களங்கமற்ற கணவன் அல்லவென்பதை விளக்கி விலகிப் போயிருக்க வேண்டும். அங்ஙனமன்றி மனிதத்தன்மைக்கு ஒவ்வாத முறை

(2-ம் பக்கம் பார்க்க)

16-ம் பக்கத் தொடர்ச்சி

கிழார்களுக்கு உண்டாக்குவதுபோல் ஆகும். மீண்டும பதுக்கல் கொள்கையை மேற்கொள்ளவும் அவர்களுக்கு, இம்முறை, தூண்டுதலை அளிக்கும்.

பெரிய நிலச்சுவான்கள், ஓராண்டு உணவிற்கும் விதைக்கும் வேண்டிய நெல் தவிர்த்து மீதமுள்ள அவ்வளவையும் சர்க்காருக்குக்கொடுத்து விட வேண்டுமெனும் பங்கீடு விதியை ஏற்படுத்தினது அரசாங்கம் அல்லவா? அது எவ்வளவு தூரம் செயலில் நிறைவேறியது? இன்று மந்திரிமார்களின் முக தரிசனத்திற்கும், நயமான சொற்களுக்கும் கீழ்ப்படிந்து நெல்லை மூட்டை மூட்டையாக அளக்கிறார்களே, இவர்கள் அனைவரும் மேற்குறித்த பங்கீடு விதியை மீறினவர்கள் அல்லவா? இன்று கொள்முதல் செய்யும் அதிகாரிகளும், முன்னர் உண்மை தெரிந்திருந்தும், கடமையைச் செய்யத் தவறினவர்களல்லவா?

இன்று நெல் அளக்கிறவர்களில் பலர் எவ்வளவோ நல்லவர்களாக இருக்கலாம். கருணையே உருவெடுத்தவர்களாகக்கூட இருக்கலாம். இவர்கள் அனைவரும் பங்கீடு விதியை மீறினார்களா இல்லையா என்பதுதான் பிரச்னை? குற்றவாளிக்கூண்டில் நிற்க வேண்டியவர்கள், சிறையில் தள்ளப்பட வேண்டியவர்கள், இன்று குதூகலத்துடன் பங்கீடு விதியை மீறிப் பதுக்கி வைத்திருந்த நெல்லை, அதிக இனும் தொகையை உடனடியாகப் பெற்றுக்கொண்டு, அளக்கிறார்கள் அதிகாரிகளிடம். தாங்கள் ஏற்படுத்திய சட்டத்தையே மீறினவர்களுக்கு, அதுவும் மக்களுக்கு முக்கியத் தேவையான உணவுப் பொருளைச் சட்டவிரோதமாக ஒளித்து வைத்திருந்தவர்களுக்கு, மக்கள் வாழ்க்கையில் விளையாடினவர்களுக்கு, தண்டனை தரவேண்டியது நேர்மையானதாக இருக்க, எதிர்பார்க்கக் கூடியதாக இருக்க, ஆணையிட்ட அமைச்சர்களாலேயே ஆதரிக்கப்படுகிறார்கள். இது எத்தகைய ஆட்சி முறையோ நாம் அறியோம்!

தட்டுக்கடை வைத்திருக்கிறவர்கள் விஷயத்தில் எல்லாம் தயவு தாட்சண்யம் காட்டப்படாமல் பங்கீடு விதிகள் பேயாட்டம் போடுகின்ற பொழுது, இந்த நிலப்பிரபுக்கள் விஷயத்தில்மட்டும்அவை பதுங்கிவிடக் காரணமென்ன? அவர்கள் பதுக்கல் திறமையைக் கண்டு பதுக்கல் சட்டமும், பயந்துபோய் பதுங்கிக் கொள்ளுகிறது போலும்!

இனும் தொகை அதிகம் வேண்டுமென்பதற்காகப், பெரிய மிராஸ்தார்கள் அறுவடை காலத்தில் எல்லாம், தானியத்தை விற்க முன்வரமாட்டார்கள். உணவு நெருக்கடியை உண்டாக்குவார்கள். உழவனை வேலையற்றிருக்கச் செய்து, மற்ற மக்களைப் பட்டினி போட்டுச் சாக வைக்க, உற்பத்தியைக் குறைக்கவும் மிராஸ்தார்கள் முனைவார்கள். அப்பொழுதுதான் உற்பத்தி குறைந்து, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு நல்ல விலை உண்டாகும் எனும் பித்தலாட்ட சித்தாந்தத்தையும் மனமார நிறைவேற்றுவார்கள். உழைப்புக்கான, உயிர் வாழ்வதற்கு அவசியமான, விளைவில் பங்கு கேட்கிறான் என்பதற்காக, உழவனை பழிக்குப் பழி வாங்க தங்களுக்குச் சொந்தமான நிலத்தைப் பயிர் செய்யாமல், தரிசாக விட்டுவிடுவார்கள். இதனால் பொதுமக்கள் பஞ்சத்தால் அவதிப்படுவார்களே என்ற கவலையும் அவர்களுக்குக் கிடையாது. நல்ல விலை கிடைக்காததினால் ஏராளமான உற்பத்திச் செய்துதான் பலன் என்னஎன சொந்தத்தில் தங்களுக்கு வேண்டிய அளவிற்கு மட்டும் பயிர் செய்து கொள்வதோடு நின்றுவிடுவார்கள். எனவே இன்று அமைச்சர்கள் கைகொண்டுள்ள கொள்முதல் முறை இந்த முடிவைத்தான் அடையப் போகிறது.

இதற்குப் பரிகாரம் என்ன? மனம் இருந்தால் மார்க்கம் இருக்கிறது. பெருவாரியான மக்களையும், உழவர்களின் நன்மையையும் ஆள வந்தவர்கள் கருத்துள் கொள்ள வேண்டும். உணவுப் பெருக்கமே ஆளுவோரின் நோக்கமாக இருந்தால், கோயில் நிலங்களையும் மடத்துப் புஞ்செய் நஞ்செய் நிலங்களையும் உடனடியாகச் சர்க்கார் பண்ணையாக்க வேண்டும். நவீன உழவுக் கருவிகளையும், உரங்களையும் உபயோகித்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும். உழவர்களுக்கே நிலம் சொந்தமெனும் ஏற்பாட்டைச் செய்யவேண்டும். நிலம் இருக்கும் திக்கைக்கூட ஏறெடுத்துப் பார்க்காத பரம்பொருட்களின் பட்டாக்களைப் பறிமுதல் செய்யவேண்டும். பண்ணையாட்களை அதட்டி அதட்டி உடம்பிளைத்துப் போயிருக்கும் பண்ணை பிரபுக்களை, அப்பெரும் பணியிலிருந்து காப்பாற்ற வேண்டும். அப்பொழுதுதான் உற்பத்தி பெருகும்.

ஏறும் மோட்டாரும், பூசும் மணமும், பூணும் ஆபரணமும், உடுத்தும பீதாம்பரமும், கன்னியர் கண்ணடியும் எங்கு குறைந்துவிடுமோ என்பதுதான் மிராசுதாரரின் பெருங்கவலை. இந்த மனக் குறையை நீக்கத்தான் போனஸ் பயன்படும். உழவனுக்கு இதனால் லாபம் எதுவும் இல்லை.பொதுமக்களுக்கோ நஷ்டம். நெல் கொள்முதலுக்கு சுமார்மூன்று கோடி ரூபாய் செலவாகுமாம். இந்தச் செலவு யாரைச் சேரும்? வரி கொடுக்கும் ஏழை மக்களைத்தான். ஏழைகள் கொடுக்கும் வரி, என்றும், ஏழைகளை ஏழைகளாகவே இருக்க பார்த்துக்கொள்ளும் பரம்பரையினரைக் காப்பாற்றத்தான் பயன்பட வேண்டுமா?

உழவர் கோரிக்கை அனைத்தும் நியாயமானவை என்று தன்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லையென்றும், வாழ்க்கைத்தரம் உயர்ந்து விட்டதால் அவர்களது தேவை அதிகமாகி விட்டதென்பதைத் தாம் மறுக்க முடியாதென்றும், பிரதமர் ஓமந்தூரார் உழவர் பிரச்னை குறித்துப்பேசியுள்ளார்.

உழைப்பின் விளைவை உழைப்பவனே அனுபவிக்கவேண்டும் என்பது எவரும் ஒப்பமுடிந்த உண்மை. ஏமாந்தகாலத்தில் சிலர் ஏற்றம் பெற்று, அதட்டி, அந்தஸ்துப்பெற்று, வளத்துடன் வாழ உறுதியான ஏற்பாடு செய்துகொண்டு இருப்பதுதான், காலத்துக்கு ஏற்ற கொள்கையாகாது. உழைப்பவர்-ஏமாந்து நிற்பவர், தெளிவேற்பட்டு, விழிப்புற்று விடுதலைக்கு வழிதேடும் வரையில் காத்திருக்க வேண்டும் எனும் போதனை சூதுடையதாகும். பிறர் மீது செலுத்தி வரும் ஆதிக்கத்தை, அந்த ஆதிக்கத்திலேயே தங்கள் அந்தஸ்தும் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கிறது எனும் உண்மையைத் தெரிந்திருப்பவர்கள், தாங்களாக முன்வந்து, தங்கள் பிடியில் சிக்கிச் சீரழிந்து அடிமைபட்டுக் கிடப்பவர்களை, விடுதலை செய்யவோ, அவர்கள் கோரிக்கை நேர்மையானது என்று ஒப்புக்கொள்ளவோ மாட்டார்கள். ஆதிக்கம் பெற்றுவிட்ட

வர்கள், அதனைப் பருகிப் போதை தலைக்கேறி நிற்பவர்கள் ஆகியவர்களிடமிருந்து, பாதிக்கப்பட்டவர்கள், வாழ்வில் ருசியற்றுப் போனவர்கள், தங்கள் கேவலத் தன்மையின் தெளிவேற்பட்டு, அதனை உதறித் தள்ளவேண்டுமெனும் உறுதிபிறந்து ஒன்றுபட்டு உரிமைப் போர் தொடுக்கவேண்டுமெனும் ஊக்கம் பெற்று, அதற்கான செயல் பல புரிந்து விடுதலை வாழ்வு பெற்றதை வரலாறு எடுத்துக் கூறும்.

வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டதால் உழவர்களின் தேவையும் அதிகமாகிவிட்டது என்பதை ஒப்புக்கொள்ளும் ஓமந்தூரார், அவர்கள் கோரிக்கை அனைத்தும் நியாயமற்றது என்று கூறத்துணிகிறார். அது ஏனோ?

மக்களில், பாகுபாடு உடன் பிறந்ததில்லை எனும் பட்டினத்தாரின் பாசுரத்தைச் சுட்டிக்காட்டும் பிரதமர், உழவர் கோரிக்கையில் கண்ட நியாயத்திற்குப் புறம்பான விஷயங்கள் எவை எவை என்பதை விளக்கவில்லை. நிலைமைக்கேற்ப நின்று விடுகிறார் போலும்.

தேவைகளைப் பூர்த்தி செய்ய, உழவர்கள், தங்கள் உடல் உரத்தைக் காட்டிக் கேட்கிறார்கள். தங்கள் உடலில் ஓடும் செந்நீரைத் தண்ணீராக மாற்றிக் கேட்கிறார்கள். உழைத்து உழைத்து வறுமையில் வாடுகிறோமே எனும் தங்கள் வாழ்வைக் காட்டிக் கேட்கிறார்கள். இது நீதியற்றதா? இதில் நேர்மை இல்லையா?

நிலப்பிரபுக்கள் நிலை என்ன? வேறு எது எதற்கோ வியர்வை சிந்தினது தவிர, வயலில் ஓர் துளி வியர்வையாவது சிந்தியிருப்பார்களா? பயிரைப் பாழாக்கும் சிறு துரும்பையாவது அவர்கள் கரங்கள் தீண்டி இருக்குமா? அவர்கள் கரங்களுக்குத்தான்வேறு பணி காத்துக் கிடக்கிறதே! உழைப்பறியாத அவர்களுக்கு, ஊராளும் உரிமை தங்களிடம் இருக்கிறது என்பது தவிர்த்து, வேறு பாத்யதை கொண்டாட நியாயம் எங்கிருக்கிறது? பிறர் உழைப்பைப் பறிப்பதற்குப் பெயர்தான் நீதியா? உரிமைக்குப் போரிடும் பண்பா?

எந்தத் தனி மனிதர்கள் மீதும் குறைகூறிப்பயனில்லை. சூழ்நிலையால் தூண்டப்பட்டு அல்லலுறுகிறார்கள் அவர்கள். அனைவருக்கும் அல்லல் தரும் பண்ணை முறையை மாற்ற வேண்டும். மக்கள் அனைவரும் பசி தெரியாமல் வாழவும், பிறர் உழைப்பில் வாழ்வுபெறும் நிலை அழியவும், மக்களில் உயர்வு தாழ்வு வேற்றுமை விலகவும், பட்டினத்தார் கூறினது செயலில் வரவுமான தன்மை உண்டாக்க வேண்டும். காலத்தின் நிலையை நன்குணர்ந்துள்ள அமைச்சர், காலத்தால் அவர்மீது சுமத்தப்பட்டுள்ள கடமையை, பட்டினத்தார் போதனையைப் பக்கத் துணையாகவாவது கொண்டு, பண்ணை முறைக்கு உடனடியாகச் சீட்டுக் கிழிக்கவேண்டும். அப்பொழுதுதான் உணவு உற்பத்தி உயரும். மக்களுக்கும் ஏற்படும் தேவைகள் நிறைவு பெறும்.

ஸ்பெயின், இத்தாலி, ஜப்பான் முதலிய நாடுகளில் முறையே ஒரு ஏகர் நிலத்தில் 7500, 5000, 4000 பவுண்டுகள் வீதம் அரிசி உற்பத்திச் செய்யப்படுகிறதாம். ஆனால் இங்கு ஏகர் ஒன்றுக்கு 1300 பவுண்டுதான் உற்பத்திபாகிறதாம். தஞ்சாவூரிலுள்ள 12 லட்சம் ஏக்கர் நிலத்தையும் நல்லமுறையில் சாகுபடி செய்தால் மாகாணத்தில் பஞ்சப் பேச்சுக்கே இடமில்லையாம். இதனை ஓமந்தூரார் திருத்துறைப் பூண்டி கூட்டத்தில் சொல்லியுள்ளார்.

உழவர்களைக் குறைத்து, தேயிலைத் தோட்டத்திற்கோ ரப்பர் தோட்டத்திற்கோ அவர்களைக் கப்பலேற்றி அனுப்பவேண்டுமானால், ஓமந்தூரார் கூறும் முறை கையாளப்படுமேயன்றி உழவர்களின் நன்மைக்கு உற்பத்திப் பெருக்கம் பயன்தரப் போவதில்லை. பண்ணை முறையில் திருத்தஞ்செய்து உழவருக்கு உரிமையைக் கொடுத்து, உற்பத்திப் பெருக்கத்திற்கான சாதனங்களையும் சர்க்கார் தந்து உற்பத்தியைப் பெருக்கினால்தான், உற்பத்திப் பெருகுவதோடு மட்டுமின்றி, மக்கள் வாழ்விலும் வளமிருக்க ஏதுவாகும்.

வெளி நாட்டிலிருந்து உணவுப் பொருள் இறக்குமதி செய்வதின் மூலம் இந்திய சர்க்காருக்கு ஆண்டு ஒன்றுக்கு 30 கோடி ரூபாய் செலவாகிறதாம். அந்தவகையில் சென்னை மாகாணம் $9\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவு செய்கிறதாம். இதுவும் ஓமந்தூரார் கூறினதுதான்.

இன்று உலகின் பெரும் பகுதியில் உணவுக்குத்தட்டுஏற்பட்டிருக்கிறது. உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் பொருட்களுக்கு அதிகக் கிராக்கி இருப்பதால் நாம் அதிகம் கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. அது தவிர நமக்கு வேறு வழி இல்லை. நமது அதிகாரத்துக்குக் கட்டுப்பட வேண்டிய நிலையில் இல்லாதவர்கள் அவர்கள். நமது அதிகாரத்திற்குக் கட்டுப் பட்டவர்கள் இந்த மிராஸ்தாரர்கள். பட்டினி நாட்டை மிரட்டிக் கொண்டு இருக்கிறது. அரிசியைப் பதுக்கி வைக்கக் கூடாது என்று சட்டம் வேறு அமுலில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இங்குள்ள மக்களுக்கு ஆத்திரம் பொங்கினால் அது மிராஸ்தாரர்களைப் பாதிக்கக்கூடிய நிலையும் இருக்கிறது. கைவசமுள்ள நெல்லைக் கொடுக்க மறுத்து, மக்களை மரணத்தின் வாயில் சிக்க வைத்து, சட்டத்தையும் புறக்கணித்து, அதிக விலைக்கே விற்கத் தயாராக இருக்கிறார்களென்றால், வெளி நாட்டிலுள்ளவர்கள் அதிக விலைக்கு நமக்கு விற்பதில் ஆச்சர்யப்படக் கூடியதோ ஆயாசப்படக் கூடியதோ ஒன்றுமில்லை.

பங்கீட்டு விதிகளை நிறைவேற்றி வைக்கவோ, சட்டத்தை காப்பாற்றத் தவறுகிற அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவோ, சர்க்கார் இதுவரை முன்வரக் காணோம். சட்டத்தை மீறுகிறவர்களுக்கு சலுகை காட்டி, பரிசு வழங்கி, அவர்கள் அன்பைப்பெறுவதில்தான்ஆர்வமாக இருக்கிறது. இருந்த இடத்திலிருந்தேசெய்ய வேண்டிய காரியத்தை அமைச்சர்கள் ஊர் ஊராகச் சென்று நிறைவேற்றுகிறார்கள். இந்த சுற்றுப் பிரயாணச் செலவு எவ்வளவு ஆகுமோ? இதுவும் ஏழைகள் தலையில்தான் வந்து விடியப்போகிறது.

பதுக்கல்காரர் விஷயத்திலும், கள்ளமார்க்கெட்கண்ணியர்கள் விஷயத்திலும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதின் மூலம், பொது மக்கள் அன்பையோ ஆதரவையோ ஓமந்தூரார் மந்திரி சபை இழந்து விட நியாயமில்லை. மக்கள் முன்னிலும் அதிக ஆதரவே காட்ட முனைவார்கள்

ஓமந்தூரார் மிகவும் நல்லவர், அன்புள்ளம் கொண்டவர். மக்கள் பஞ்சத்தால் மடியக் கூடாதே என்றுதான் இந்த நற்காரியத்தில் ஈடுபட்டுள்ளார் எனச் சிலர்-ஏன்-பலரும் கூறுவர். நாம் அவர் பண்பு பற்றி

(12-ம் பக்கம் பார்க்க)

# கரை போகவில்லை

—●—

[தவச்சாலையில் சம்புகன், தவம் செய்துகொண்டிருந்தான்.

சாந்தி தவழும் அவன் முகம், காண்போரை வசீகரப்படுத்தக்கூடியதாக இருக்கிறது.

தேவனின் திருப்பெயர்களைக் கூறித்துதிக்கிறான்.

இராமன், அங்கு வருகிறான்—முகத்திலே கோபக்குறியுடன்.

சம்புகனின் தவம், இராமனின் அதிகாரக் குரலால், கலைகிறது.

சீற்றத்துடன், பேசுகிறான் மன்னன் — காரணம் புரியாதவனாகிக் குழம்புகிறான் சம்புகன்.

மன்னரின் கோபம், எதன் பொருட்டு என்பதை அறிந்ததும் சம்புகனுக்குச்சிரிப்புஉண்டாகிறது.

தவம், செய்வது, தவறு! என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்கிறான். தண்டிக்கவந்த இராமனையும் கேட்கிறான்.]

சம்புகன்:— தருமசொரூபியே! தவம் செய்வது, குற்றமா? என் தலை மட்டும் வெட்டப்பட்டு விட்டால், கவலை கொள்ளேன், இராமா! தர்மத்தையே, வெட்டி வீழ்த்துகிறாயே,—தகுமா? இராவணனைக் கொன்றாய், இலங்கையைவென்றாய், என்று கூறினார்களே, அது பொய்! மன்னரின் பெருமை மங்கக்கூடாது என்பதற்காக, யாரோ, தந்திரசாலி கட்டிவிட்ட பொய்யாக இருக்க வேண்டும். இராமா! நீ, இராவணனிடம், தோற்றாய்—அவன் உன்னைத் தன் பெருந்தன்மையால், மன்னித்தான் — மணிமுடியும் சுமந்து கொண்டிரு என்று சொன்னான்—ஆம்! அதுதான் நடந்திருக்கும்—இங்கு நீ, இராவணனுடைய பிரதிநிதியாகவே வந்திருக்கிறாய்.

இராமன்:— சம்புகா! சித்த சுவாதீனமற்றவன்போலப் பேசாதே—

ச:- பொய் அல்ல! அவன் தவத்தை அழிப்பவன் — இதோ நீயும் அதே வேலை செய்ய வந்திருக்கிறாய்—அவனாவது தவத்தை மட்டும் அழித்தான், நீயோ, தவம் செய்யும் என்னையே அழிக்கவந்தாய். —அவனுக்கு, நீ பிரதிநிதிதானே! —பொய்யா—?

இ:- சம்புகா! இங்கு நான் தவம் கூடாது என்று கூறி, நடத்தப்படும் தவங்களை எல்லாம் அழித்துக் கொண்டிருக்கிறேன் என்று எண்ணுகிறாய்? தவம் நடக்கிறது — நான் அதனை ஆதரிக்கிறேன்—உதவியும் செய்கிறேன்.

ச:- இது, தவம் அல்லவா?

இ:- தவம்தான்! ஆனால் நீசெய்வது, தகாது—என் கோபம், தவத்தின் மீதல்ல—அந்தக் குணம் அரக்கனுக்கு! அவரவர், தத்தம், குலத்துக்கேற்ப நடக்கவேண்டும் என்ற தர்மத்தைக் காப்பாற்றவே, நான் இந்தக் கடுமையான நடவடிக்கை எடுக்கநேரிடுகிறது. அரக்கர்போலத் தவங்களைக் கெடுக்கும் துஷ்டனல்ல நான்.

ச:- யோசியாமல்பொய்பேசுகிறாய் —இராமா! கூசாது,பேசுகிறாய். உன் ஆட்சியிலே, சிலருக்குத் தவம் செய்தால், ஆதரவும், என்போலச்சிலருக்குத் தலை போகும் நிலையும் இருக்கிறது. இதை நீ, நீதி என்கிறாய்.

இ:- தர்மம்!—நானும் மீற முடியாத தர்மம்.

ச:- இதற்குப் பெயர், தர்மம்! அரக்கர் செய்தது மட்டும் என்ன? அவர்களும், ஆரியர் செய்த தவங்களைக் கெடுத்தனரே தவிர, அவர்கள் தவத்தையே வெறுப்பவர் என்றும் கூறமுடியாதே. அவர்களில் பலர், தவம் செய்தனர் — இராவணனே, பெரிய தவசி! அரக்கர் தலைவர்களெல்லாம், தவம் பல செய்து, வரம் பெற்றவர்கள். ஆகவே அவர்களும், தவம் என்றாலே வெறுத்து அழித்தவர்களல்ல —தவம் நாங்கள் செய்யலாம்—ஆரியர் செய்யலாகாது என்றனர்—அழித்தனர்—நீயும், இங்கு ஆரியர் தவம் புரியலாம், அநாரியனான நான் புரிதல் தகாது, தலையை வெட்டுவேன் என்கிறாய்—இலங்கையான் செய்தால் பாபம்!—அயோத்தியான் அதே காரியத்தைச் செய்யும்போது, அதற்குப் பெயர், ராஜ தர்மம்! இராமா! எனக்கு வெட்கமாக இருக்கிறது, இப்படிப்பட்ட அரசிலே வாழ்கிறோமே என்று—சீக்கிரம், என் தலையை வெட்டிவிடும்.

* * *

வாதம் முடிந்தது. இராமனின் தண்டனை கிடைத்தது, வரம்வேண்டித்தவம் செய்தசம்புகனுக்கு-அவன் தலை, தரையில் உருண்டது.

இராமன், தவச்சாலையை விட்டு நீங்கினான்.

இரத்தம் ஒழுகும்தலை! துடித்துத் துவண்ட உடல்! காக்கை கழுகுகள் வட்டமிடலாயின. வழிப்போக்கர்கள், இந்தக்கோரக் காட்சியைக்கண்டனர். அலறினர்.

சம்புகனின் தாயாருக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டது — உன் மகன் தலையை யாரோ வெட்டிவிட்டனர், என்று!

ஐயோ, மகனே! என்று அண்டமதிரக் கூவினாள் அன்னை. ஓடோடி வந்தாள் தவச்சாலைக்கு, தரையில் உருண்டுகிடந்த தலையைக்கண்டாள், மீண்டும் கண்திறந்தாள் —தலையைக் கையிலே எடுத்தாள் — துடி துடித்தாள் — பெருங்குரலில் கூவி அழுதாள்—பெற்றவள், வேறென்ன செய்வாள்.

எடுத்துக்கொண்டாள் தலையை—எதிர்ப்பட்டோரை எல்லாம், கேட்கலுற்றாள், யார் செய்ததுஇக்கொடுஞ் செயலை என்று]

* * *

ச. தாயார்:— மகனே! இந்தக் கதியா உனக்கு? யார் செய்த சதியடா இது? எந்தப்பாதகன், பாவி, இந்தக்காரியத்தைச் செய்தான்?

கண்மூடிக், கைகூப்பிக், கடவுளைத் தொழுது கொண்டிருந்த என்மகனை, கத்திகொண்டு, கழுத்தை வெட்டிய காதகன் யாரய்யா! பழிபாவம் அறி

(12-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 14—9—47 [ஞாயிறு


## கலர் அல்ல...........!

✲

**அவர்** நல்லவர்

நாணயஸ்தர்

உபகாரி

திறமைசாலி

நண்பர்

நமது பக்கத்தார்.

**எல்லாம் சரி, ஆனால், காங்கிரஸ் காரனாயிற்றே நான், ஆகவே காங்கிரஸ் அபேட்சகருக்குத் தானே ஓட் தரவேண்டும். அதுதானே நியாயம்**—என்று, பேசுகிறார்கள், பலர்—

காங்கிரஸ், முனிசிபல் தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்தியிருப்பதால், காங்கிரஸ்காரர்கள், அந்தக் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே 'ஓட்' போடவேண்டும் என்று எண்ணுகிறார்கள்—பிரசாரம் செய்கிறார்கள்.

இந்த எண்ணம் சரியா? இந்தப் பிரசாரம் சரியா?

இந்தக் கேள்வியை, ஒவ்வொரு 'ஓட்டரும்'—குறிப்பாகக் காங்கிரஸ் அபிமானம் உடைய ஓட்டர்கள், தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ளவேண்டுகிறோம்.

முனிசிபல் வேலைக்கும், ஒருஅகில இந்திய கட்சிக்கும் என்ன சம்பந்தம்?

முனிசிபாலிடிகளிலே செய்ய செய்யக் கூடிய வேலைகள், ஏதாவது, காங்கிரசுக்கென்று தனியாக இருக்கிறதா?

காங்கிரஸ்காரர், என்றால், நாட்டு விடுதலைக்காக வேலை செய்பவர், சுயராஜயத்துக்கு வேலை செய்பவர் என்று தானே பொருள்.

அப்படியிருக்க, முனிசிபாலிடியிலே சுயராஜ்யம் பெறுகிறவேலை, என்ன இருக்கிறது?

சுயராஜ்ய விழாவை ஆகஸ்ட்டு 15-ந்தேதி கொண்டாடியான பிறகு, காங்கிரசுக்குப்பொதுவாகவே வேலை இல்லை என்று காங்கிரசிலுள்ள பெரிய பெரிய தலைவர்கள் கூறிவரும் போது, காங்கிரசைக் கலைத்துவிட வேண்டும், அல்லது அதன் கொள்கைகளை அடியோடு மாற்றிஅமைக்க வேண்டும் என்று கூறிவரும் போது, இங்கு, காங்கிரசின் பெயர் கூறிக் கொண்டு, முனிசிபாலிடிகளுக்குள் நுழைய, ஏன் திட்டமிட வேண்டும்.

ஏன், தகுதி, திறமை, சொந்த யோக்யதை, பொறுப்பு, இவைகளையும், திட்டத்தையும் காட்டி, 'ஓட்' கேட்காமல், என்னைக்கவனிக்காதே, கட்சியைப்பார்—என்று ஏன் இப்போதும், கூறவேண்டும்?

இவைபோன்ற கேள்விகளை, காங்கிரஸ்காரரைப் பார்த்து இன்னொரு காங்கிரஸ்காரர் கேட்கிறார்—அதை இங்கு வெளியிடுகிறோம்.

இதைக் கண்ணுறும் அன்பர்கள், காங்கிரஸ்காரர்களிலே, எந்த ரகமாக இருப்பினும் சரி,

தடியடிபட்ட காங்கிரஸ்காரர்,

ஆகஸ்ட்டு தியாகி,

மறியல் செய்த காங்கிரஸ்காரர்,

என்ற எந்த வகையாக இருந்தாலும் சரி, அல்லது, தேர்தலுக்காக மஞ்சள் சாயம் பூசிக்கொண்ட மகானுபாவர்களாக இருந்தாலும் சரி,

அவர்களை எல்லாம் பார்த்துத்தான் கேட்கிறார், வேறோர் காங்கிரஸ்காரர்.

வேறோர் காங்கிரஸ்காரர் என்றால் சாமான்யமானவரல்ல.

காங்கிரசின் ஆகஸ்ட்டுப் போரிலே ஈடுபட்டு, தூக்குத் தண்டனை தரப்பட்டுச்சிறையில்வாடிப்,பிறகு, காங்கிரஸ் சர்க்காரால் விடுதலை செய்யப்பட்டு, நாடெங்கும் புகழப்பட்ட

குலசேகரப்பட்டினம்

**ராஜகோபாலன்**

எனும் காங்கிரஸ்காரர், **31—8—47**ல், தமது பத்திரிகையான 'எதிரொலி' என்பதிலே, எழுதிக் கேட்கிறார், முனிசிபாலிடியிலே காங்கிரசுக்கு என்னய்யா, வேலை என்று.

அதன் சாராம்சம் கீழே வெளியிட்டிருக்கிறோம்.

"எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள் அடுத்த மாதம் வருகின்றன. முதலில் முனிசிபாலிட்டிகள் பிறகு ஜில்லா போர்டுகள்; இவற்றிற்குப்பலதரப்பட்ட காங்கிரஸ் வாதிகளுக்குள் போட்டியும் பூசலும் தலைவிரித்து ஆடப்போகின்றன.

காங்கிரஸ் வாதிகள் ஜில்லா போர்டுகளிலும் முனிசிபாலிடிகளிலும் அதிகாரம் தாங்கி ஆட்சி புரியவில்லையே என்று பொதுமக்கள் யாராவது அழுதார்களா? கிடையவே கிடையாது. இந்த ஒரு துறையிலாவது இந்தக் காங்கிரஸ் வாதிகள் என்று சொல்லிக்கொண்டு ஓடிவரும் அதி தீவிர தேச பக்தர்களின் உபத்திரவம் இல்லாமல் இருக்கக் கூடாதா என்று பொதுமக்கள் ஏங்குகிறார்கள். முனிசிபாலிடிகளின் சாக்கடைகள் சுத்தமாக இருப்பதற்கும், காங்கிரஸ் மகாசபையின் பெயரைப் பலர் உபயோகித்துக் கொண்டு இந்த நேரத்தில் திருவிளையாடல் புரிவதற்கும் என்ன சம்பந்தம் என்றே தெரியாமல் அவர்கள் விழிக்கிறார்கள்.

காங்கிரஸ் பெயரைக்கேவலம் ஜில்லாபோர்டு முனிசிபாலிட்டி அதிகார வேட்டைக்குக் கருவியாக உபயோகப் படுத்துவது பொது மக்களுக்கு இழைக்கப்படும் ஒண்ணாம் நம்பர் அநீதி என்று நாம் நினைக்கிறோம். இதற்கு உடந்தையாக இருக்கும் காங்கிரஸ் கமிட்டிகளும், காங்கிரஸ் வாதிகளும் பொதுமக்களை ஜனநாயகத்தின் பேரால் ஏமாற்றுகிறார்கள் என்பதை நாம் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சுதந்திரத்திற்காகப் போராடிவந்த காங்கிரஸ் மகாசபையின் லட்சியத்துக்கும் ஸ்தல ஸ்தாபனஆட்சிக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்று கேட்கிறோம்.

தேர்தலில் ஒரு கட்சியோ ஸ்தாபனமோ ஈடுபடுவதென்றால் தனது கட்சியை எடுத்துச் சொல்லி ஓட்டர்களின் ஆதரவைப் பெற ஒரு தேர்தல் கொள்கை விளக்கமும், பிரகடனமும், நடைமுறைத் திட்டமும் அந்தக்கட்சிக்குஇருக்கவேண்டும்.

அப்படிப்பட்ட திட்டம்காங்கிரஸ் அபேட்சகர்களுக்கும் ஸ்தல ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சிகளுக்கும் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறோம். என்ன இருக்கப்போகிறது? ஞான சூன்யம் தான்.

வெகு சமீபத்தில் டொமினியன்

அந்தஸ்தைப் பெற்ற காங்கிரசின் செல்வாக்கும், பேரும், புகழும், அர்த்தமற்ற சம்பந்தமற்ற, பொது ஜனங்களுக்குத்தம்படிக்குப் பிரயோசனமில்லாத தேர்தல்களில் அநியாயமாகத்துஷ்பிரயோகம் ஆகின்றன.

இந்தத் தேர்தல்களில் பொது மக்கள் கடமை என்ன? சந்தேகமில்லாமல் திறமைக்குத்தான் அவர்கள் ஓட்டுக் கொடுப்பார்கள். அவர்கள் இந்த ஜனநாயக உரிமையை உபயோகிப்பதானல் பல இடங்களில் காங்கிரஸ் தோற்றுப் போகலாம்.

ஆனல் பெரும்பான்மையான தொகுதிகளுக்குக் காங்கிரஸ் முத்திரையில் முதலாளிகளும், கொள்ளைக்காரச்செல்வந்தர்களும்வருகிறார்கள். இவர்கள் பதவிகளிலே ஒட்டிக்கொண்டு, தங்களுடைய செல்வாக்கை இதன் மூலம் பெருக்கிக்கொள்வார்கள். காங்கிரசில் மாகாணரீதியாக ஒரு பச்சை முதலாளித்துவ ஸ்தாபனமாவது வெட்ட வெளிச்சமாகும்.

ஆகவே, காங்கிரஸ் முத்திரையில் வரும் பிற்போக்கு வாதிகளையும், முதலாளிகளையும், வாக்காளர்கள் முறியடித்து இந்தப் பதவிப் பித்தர்களின் திட்டங்களைச் சுக்கு நூருக்க வேண்டும்.

ஸ்தல ஸ்தாபன சக்தியிலே புகும் காங்கிரஸ் இம்மாகாணத்தில் தனது அழிவைச் சீக்கிரமாகத் தேடிக்கொள்கிறது என்பதில் சந்தேகமில்லை."

இப்போது, யோசியுங்கள், உங்கள் கடமை என்ன?

தகுதி
திறமை
பொறுப்பு
நாணயம்

உண்மைத் தொண்டுடன் உழைக்கும் நண்பர்கள், யார், என்றுதெரிந்து ஓட் தாருங்கள். கலர் அல்ல முக்கியம்! காரியமே முக்கியம்!

என்வே, வருகிற முனிசிபல் தேர்தலில், யார் உண்மையாகத் தொண்டு செய்யக் கூடியவர்கள்என்பதையே கவனித்து, ஓட் அளித்து, நகர நலனைப் பாதுகாக்கும் கடமையைச் செய்ய வேண்டுகிறோம்.

★

11-ம் பக்கத் தொடர்ச்சி

கள்ளக்காதலர் இன்பத்தில் ஆழ்ந்திருந்த நேரத்தில், வெளியில் உலாவச் சென்ற அய்யர், அறையினுள் நுழைந்தார். அய்யர் வந்ததை ஆனந்தத்தில் மூழ்கியிருந்த இருவரும் கவனிக்கவேயில்லை. வழக்கத்திற்கு மாறுக, அய்யருக்கு அன்று கோபம் வந்து விட்டது பாபம். அருகேயிருந்த நாற்காலியை அவர்கள்மேல் வீசி யெறிந்தார். இராஜத்தின் முகத்திலே நாற்காலிபட்டு, பலத்தகாயம் ஏற்பட்டது.

இராஜம் வைத்திய சாலைக்குஎடுத்துச் செல்லப்பட்டாள். இராஜத்தின் பெற்றோர் செய்தியை அறிந்து, வந்தனர்.

முத்து பணம் தந்தான். இராஜத்தைக் கொன்றுவிடவே முயற்சித்ததாக அய்யரின் மேல் வழக்குத் தொடுத்தார்கள். வழக்கும்நடந்தது. வாலிபன் தந்த பணம், வயோதிகக் கணவனின் கழுத்திலே கைகொடுத்துக் கம்பிகளுக்கிடையே கொண்டுவந்து சேர்த்தது. சிறையிலே அய்யர், முத்து வீட்டிலே இராஜம். ஸ்ரீமதி இராஜம் நரசிம்மன், திருமதி இராஜம் முத்துவானள்!

* * *

அய்யர் தன் வரலாற்றைக் கூறி முடித்ததும் வரதன் சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் உள்ளத்திலே பற்பல எண்ண அலைகள் எழுந்தன!

பொன்னி இளம் விதவை. நரம்புகளிலே இளமை நர்த்தனம்செய்தது. இளமையின் இச்சைக்கு இரையானள்!

இராஜம் அழகும் இளமையும் உடையவள்! ஆனல் மறுதாரம்! அவள் உள்ளம் காதற்பசி, காதற்பசியெனக் கதறியது. மனங் கலங்கிய மங்கைக்கு மகிழ்ச்சிதர முத்து முன் வந்தான்.

இருவரும் யோசனையில் ஆழ்ந்திருந்த நேரத்தில், சலசலப்பான ஓசை கேட்டது. முன்போலக் காட்டுப் பன்றியாய் இருக்குமென்று எண்ணினர்கள். காலடிச் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தார்கள்!

"ஓடினல் சுடுவோம்!" என்று துப்பாக்கியைக் காட்டினர்கள், போலீஸ்காரர்கள்! இரு கைதிகளும் செய்வதறியாமல் கண்ணீர் விட்டார்கள்! கம்பிகளுக்கிடையே திரும்பவும் அடைபட்டார்கள்.

✻

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நாளது 19-9-47 வெள்ளி காலையில் திருச்சி R. சுலைமான் அவர்கட்கும் திருமதி மும்தாஜ் பேகம் அவர்கட்கும் மாயவரம் மணமகள் இல்லத்தில் (8, செட்டித் தெரு) திருமணம் நடைபெறுவதால் இயக்க அன்பர்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருளவேண்டுகின்றோம்.


# புதிய வெளியீடுகள்,

## சி. என். அண்ணுதுரை எம். ஏ., எழுதியது.

1. கம்பரசம் 1—8—0
2. கற்பனைச் சித்திரம் 1—0—0
3, விடுதலைப்போர் 1—0—0
4. ரோமாபுரி ராணிகள் (2-ம் பதிப்பு) 2—4—0
5. குமரிக்கோட்டம் 1—0—0
6. வர்ணஸ்ரமம் 0—12—0

குறிப்பு: வியாபாரிகளுக்கு 20 சதம் கழிவு தரப்படும். தபால்செலவு தனி. தனிப்பிரதி வேண்டுவோர் புத்தகக் கிரயத்தோடு அணு நான்கு சேர்த்து மணியார்டர் அனுப்பவேண்டும்.

திராவிடப் பண்ணை,
தெப்பக்குளம், திருச்சினப்பள்ளி.

# ★ இரு கைதிகள் ★

[இராதாமணாளன்]

முட்செடிகளும், கொடிகளும், ஈச்சம்புதர்களும், பனைமரங்களும், அடர்ந்து வளர்ந்திருந்த இடம். கல்லும் முள்ளும் நிறைந்த தரை. குளிர்ச்சியாக வீசும் காற்று. ஓசையில்லாக்காடு. நிலவில்லா வானம்.

புதர்களுக்குள் புகுந்து புகுந்தும் செடிகளைவிலக்கிக்கொண்டும்,கொடிகளை அறுத்துக்கொண்டும், இருவர் ஓடியோடி ஒளிந்து ஒளிந்து வந்து கொண்டிருந்தார்கள். காட்டாற்றுக் கரைக்கு வந்து சேர்ந்ததும் இருவரும் சோர்ந்து நின்றனர்.

அச்சமிகுதியினால் அவர்களது உள்ளங்கள் பதை பதைத்தன.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ஆற்றுமணலிலே அமர்ந்தார்கள். திரும்பவும் ஒருவன் எழுந்து, எல்லாத்திசைகளிலும் சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு உட்கார்ந்தான். இருவரும் சிறிதுநேரம் மௌனமாகவே யிருந்தனர்.

செடிகளிடையே சல சலப்பான சப்தம் கேட்டதும் திடுக்கிட்டார்கள். அவர்களது உள்ளங்கள் படபடவென அடித்துக்கொண்டன. விரைவாய் இருவரும் எழுந்தனர். ஓசைவந்த இடத்தை உற்று நோக்கினர். விண்மீன்களின் மங்கிய ஒளியில், புதரிலிருந்துஉறுமிக்கொண்டே ஓடிய ஒரு காட்டுப் பன்றியைக்கண்டதும், 'அப்பா' என்று ஒருபெருமூச்சுவிட்டுப் பேசாமல் இருவரும் உட்கார்ந்தார்கள்.

அடிவானத்திலிருந்துஅப்பொழுதுதான் சந்திரன் உலகைநோக்கிமெதுவாக வெளியே வந்துகொண்டிருந்தான். அவர்களது முகங்களில் அச்சத்தின் அறிகுறிகள் நன்கு புலப்பட்டன.

"வரதா! ஏம்பா இன்னும் பயப்படறே! இனி நம்மை யாராலும் கண்டு பிடிக்கவே முடியாது!"

"உண்மையாகவா?"

"ஆமாம்! இனிநாம் அகப்படவே மாட்டோம்!"

"பெரிய ஆள் சாமி நீங்கோ! நேற்றுத்தான் வேலூர் சிறையிலே இருந்து இங்கு வந்திங்கோ; அதுக்குள்ளே, எவ்வளவு துணிச்சலா என்னையும் அழைச்சிக்கிட்டு, சிறையிலே யிருந்து ஓடிவந்துவிட்டிங்கோ! ஏன் சாமி சிறையிலே ரொம்ப நாளா உங்களுக்குப் பழக்கமுண்டா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லையப்பா! ஏதுவோ முன்ஜென்மத்திலே செய்த பாபம், இப்போதுஅனுபவிக்கிறேன்! அவ்வளவுதான்!"

"என்ன தப்பு செய்திங்கோ?...... ...........அட அட! ஏன் சாமி அழுறிங்கோ? என்னதான்செய்திங்கோ? திருடினிங்களா?"

"இல்லப்பா!"

"யாரையாவது மோசம் செய்திங்களா?"

"இல்லப்பா!"

"அநியாயமா யாரையாவது அடிச்சிங்களா?..................சேச்சே! உங்க ஜாதியாரு யாரையுமே அடிக்கமாட்டாங்களே, பாவம் ரொம்பவும் பயந்தவங்கோ ஆச்சே! செய்த தப்பு என்னுங்கோ? சொல்லுங்கோ!"

"வரதா! அந்த வயிற்றெரிச்சலை ஏனப்பா கிளர்ரே! நான் என் மனைவியைக்கொலை செய்ய முயற்சித்தேனு!" என்று கூறியதும் அவர் கண்களில் தத்தளித்துக்கொண்டிருந்த நீர் கீழே சிந்த ஆரம்பித்தது.

"ஏன் சாமி,வருத்தப்படறிங்கோ, நான்கூடத்தான் கொலை செய்த்தாக வீணாகப் பழிசுமத்தினார்கள்!"

"யாரை"

"என் தங்கையை!"

"உன் தங்கையா? ஏன்? விபரமாய்ச்சொல்லு வரதா!"

வரதன் வரலாற்றைக் கூறத் தொடங்கினான்.

* * *

வரதன் ஒரு நடுத்தரமான குடும்பத்தில் பிறந்தவன். அவன் தகப்பனாருக்கு ஊரிலே சிறிது செல்வாக்கு இருந்தது. வரதனுக்குப் பொன்னி என்றொரு தங்கை யிருந்தாள். பொன்னி, மாநிறமும், மதிமுகமும், கூரியகண்களும், நீண்ட கூந்தலும், உள்ள அழகுக்கன்னி.

பொன்னியின் கலக்கமற்ற உள்ளத்தைக் கவர்ந்தவன் சோமு என்ற அவள் அம்மான் மகன். சோமுவின் தந்தைக்கும், பொன்னியின்தந்தைக்கும் பல ஆண்டுகளாகப்பேச்சுவார்த்தையேகிடையாது. அவர்களிடையேயிருந்த விரோத மனப்பான்மை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே சென்றது. ஆகவே பொன்னியை வேறு இடத்தில் கொடுக்க, அவள் தகப்பனார் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்.

இதை அறிந்த பொன்னி புலம்பினாள். தன்னந்தனிமையில் இருந்து உள்ளம் கவர்ந்த காதலனை நினைந்து நினைந்து கண்ணீர் விட்டாள். ஒரு நாள், துணிந்து, தன் ஆசை அவ்வளவையும் தன் தாயிடம் கூறி அழுதாள். சோமுவைத்தான்மணப்பேன், இல்லாவிட்டால் குளத்திலோ குட்டையிலோ விழுந்து இறந்துவிடுவேனென்றும் கூறினாள்.

செய்தி அவள் தந்தையின் செவிக்கெட்டியது. 'ஆஹா! அவளுக்கு அவ்வளவு கொர்வமா?' என்று ஆடினார். பேயே, நாயே என்று பலப்பல வசைமொழிகளைப் பாடினார். சின மிகுதியினால் வீட்டினுள்ளே ஓடி, சால் பிடித்து இறைத்த தன் முரட்டுக் கையால் கன்னியின் கன்னத்திலே சாடினார். அடியின் வலி ஒருபக்கம், வடிவழகனது பாசம் மற்றொரு பக்கம், ஆக இரண்டுமாகச் சேர்ந்து வஞ்சியை மிகமிக வாட்டின!

அடுத்த ஊரிலே ஒரு பணக்காரன், ஆனால் நோயாளி. அவனுக்குப் பொன்னியைக் கேட்டார்கள். நோய் இருந்தாலும் கவலையில்லை, பணமிருந்தால் சரி என்ற எண்ணத்துடனே, பொன்னியைத் தருவதாக ஒத்துக்கொண்டார், பொன்னியின் தந்தை.

பொன்னியின் உள்ளம் படபடத்தது. இந்த நிலைமையை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்றெண்ணியதும், அவள் இதயமே வெடித்துவிடும் போலாகிவிட்டது. தந்தையின் இந்த முடிவிலிருந்து எப்படித் தப்பப் போகிறோமென்ற பயம் அவள் நெஞ்சில் பெருத்த தவிப்பை உண்டாக்கியது. கூரிய கருவிழிகள் குளமாயின. அடக்கொணாத் துக்கத்தால் துடிதுடித்தாள். பெண்ணின் பெருந்துயரைக் கண்டும், பெற்ற தந்தை தன் பிடிவாதத்தை விடவில்லை.

பொன்னியின் கழுத்தில் தாலி ஏறியது. மகளைப் பெரிய இடத்திலே கொடுத்துவிட்டோமென்று மனமகிழ்ந்தனர் பெற்றோர். வரத

னுக்கு மட்டும் இந்தக் கல்யாணத்திலே திருப்தி கிடையாது. தந்தையை எதிர்த்துப் பேசவோ தைரியம் கிடையாது.

ஒருநாள் வரதனும் அவன் தகப்பனாரும், சாப்பிட்டுவிட்டுத் திண்ணையின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

பொன்னியின் வீட்டு வேலைக்காரன் விரைந்துவந்து கொண்டிருந்தான். வீட்டின் அருகே வந்ததும் தயங்கிநின்று முகத்தைக் கவிழ்த்துக் கொண்டான்.

"ஏண்டா, பொன்னி சவுக்கியமா?" என்றான் வரதன். வேலைக்காரன் மௌனமாக யிருந்தான். அவன் முகம் வாடியிருந்தது.

"என்னடா சமாசாரம்? சொல்லுடா!" என்று அதட்டிக் கேட்டார் வரதனின் தகப்பனார். மயங்கி நின்று கொண்டிருந்தவன், "எஜமான், மாரடைத்து இறந்துவிட்டாருங்கோ!" என்று அழுதவண்ணம் கூறினான்.

பொன்னியின் தகப்பனார் தலையில் அடித்துக்கொண்டார். அவள் அம்மா கதறினாள். இரண்டாண்டுகளுக்குள் இளம்பெண் கணவனை இழந்தாள்! கைம்பெண் ஆனாள்! பொன்னி தன் தகப்பனார் வீட்டிற்கே வந்துவிட்டாள்.

அடுத்த ஆண்டே வரதனுக்கு மணமாயிற்று. வரதனும் அவன்மனைவியும் இன்பமாய்ப் பேசிக்கொண்டிருப்பதைக் காணும்போதெல்லாம், ஒளி வீசும் அவள் கண்களில் ஒளி மங்கும்! அவள் நெஞ்சம் நிலை தடுமாறும்! இளம்விதவையின் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் எழுந்து, எவ்வளவு ஏக்கத்தில் அவளை ஆழ்த்தியதோ? யார் அறிவார்? யார்தான் அறிய ஆசைப்படுகிறார்கள்? அறிந்தவர்களிலே எவ்வளவு பேர் கூசாது குளறாது எடுத்துக் கூறினார்கள்?

ஒரு இரவு வரதனும் அவன் மனைவியும் வழக்கம்போல அறையிலே இருந்துகொண்டு, இன்பமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்! அன்றைக்கு வெளியே, பாயிலே தனியாகப், புரண்டு புரண்டு படுத்துக் கொண்டு, புழுப்போல் துடித்துக் கொண்டிருந்தாள் பொன்னி!

அடிக்கடி பேச்சின் இடையே, வரதனின் இளம் மனைவி வாய்விட்டுக் கலகலவெனச் சிரித்தாள்! சிறிது நேரம் கழித்து வரதனின் மனைவி, "பேசாமலிருங்கள்!" என்றாள்.

"ஏன்?"

"உற்றுக் கேளுங்கள்!"

இருவரும் கூர்ந்து கவனித்தார்கள். பொன்னி தேம்பும் சப்தம் கேட்டு, இருவரும் வருந்தினர்.

மாதங்கள் சில ஓடி மறைந்தன. ஊரிலே ஒரு வதந்தி பரவியது. சோமுவும் பொன்னியும் சோரத்தனமாகக் காதல் செய்வதாகப் பேசிக்கொண்டார்கள்!

அண்ணன் தன் மனைவியுடன் அறையிலே கொஞ்சி மகிழ, வெளியிலே பொன்னி, வேதனையை அணைத்துக்கொண்டு விம்மி விம்மி விழிகளில் நீர் சிந்தினாள்!

பொன்னி, தன் உள்ளமென்னும் மானை, மன உறுதியென்னும் கயிறு கொண்டு கட்டினாள்! மான், கயிற்றை அறுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தது. குலப் பெருமையென்னும் முள்வேலி யிட்டாள்! அதனையும் தாண்டிச் சென்றது அம்மான்! ஓடும் மானைப் பிடித்துக்கட்ட முயன்றாள்! முடியவில்லை! மான் ஓடியது, ஓடியது, கடைசியாக தன் பழைய காதலன் சோமுவிடம் தஞ்சமடைந்தது.

தஞ்சமடைந்த வஞ்சியைத் தள்ளிவிடவில்லை சோமு. இருட்டிலே சந்திப்பு, இன்பம்! காலமும் இடமும் வசதியாக யிருக்கும்போதெல்லாம், காதலர் சந்திப்பர்! களிப்பர்! களிப்பு முற்றி, கைம்பெண் கர்ப்பிணியானாள்!

செய்தியை அறிந்து, அவள் தாய் ஒரு நாள் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். மறுநாள் காலை, பொன்னியின் பிணம் தோட்டத்துக் கிணற்றிலே இருந்தது!

அவமானத்தைப் பொறுக்கமாட்டாமல், அவளை, வரதன்தான் கிணற்றில் தள்ளிக் கொன்றான் என்று வழக்கு எழும்பியது. வரதனும் சிறையில் அடைக்கப்பட்டான்.

* * *

இப்படியாக வரதன் அழுது கொண்டே தன் வரலாற்றைக்கூறி முடித்தான்!

"அழாதே வரதா! உன்மேலே என்னதவறு இருக்கு! அவள் சாப்பிட்டுக் கொழுத்து விபசாரியானாள்! ...........வரவரக்காலம் கெட்டே போச்சு! இந்தக் காலத்துப் பெண்களே ரொம்ப மோசம்!........" இப்படி அய்யர் பேசிக்கொண்டே தன் வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார்.

* * *

நரசிம்ம அய்யர் கல்லூரியிலே சரித்திர ஆசிரியர். வயது சுமார் நாற்பதுக்கு மேலிருக்கும். முதல் மனைவி இறந்துவிடவே, இரண்டாம் தாரமாக இராஜமென்ற ஒரு இளம் பெண்ணை மணந்து கொண்டார். இராஜம் ரோஜாப்பூ மேனியாள்! கண்ணாடிக் கன்னங்கள், காதல் பொழியும் கண்கள், கட்டான தேகம்........!

அய்யரின் வீட்டின் முன் பகுதியிலே, அய்யர் ஆசிரியராக யிருந்த அதே கல்லூரியில் தமிழ் ஆசிரியனாக யிருந்த முத்து என்ற வாலிபன் இருந்தான். முத்து இருபத்தைந்து வயதும் நிரம்பாத காளை! அழகிய முகம், அன்பான பேச்சு, இவைகள் பிறரை அவனிடம் தோழமை கொள்ளச் செய்தன. ஐயர் வகுப்புத் தான். இராஜத்திற்கு முத்துவிடம் நாளுக்கு நாள் ஆசை வளர்ந்து கொண்டே வந்தது. அய்யர் வீட்டி லில்லாத நேரம் பார்த்து, முத்துவிடம் படிக்கப் பத்திரிகைகள் வாங்கிச் செல்வாள்! படிக்கவா?....

இராஜத்திடம் ஏற்பட்டிருந்தமாற்றத்தை அவள் கணவன் தெரிந்து கொள்ளாமலில்லை.

ஒரு நாள் மாலைநேரம், இராஜமும் முத்துவும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"தாங்களே எனக்குக் கணவனாகக் கிடைத்திருந்தால்........"

"இப்போது மட்டும் எப்படியிருக்கிறேன். தாலிகட்டியது வேறொருவன்; கட்டியணைத்துமுத்தம்தருவது நான்தானே?"

"அந்தக் கிழவனொருவன் நமக்குத் தொந்தரவாக........"

"இருந்தாலென்ன! இன்னும் சில தினங்களில் தனியாகப் போய்விட்டால்..........."

"தனியாகவா போய்விடுவது? ஐயோ! எனக்கென்னமோ பயமாகவே யிருக்கிறது"

(9-ம் பக்கம் பார்க்க)

7-ம் பக்கத் தொடர்ச்சி

யாத பாலகனய்யா! இவன் என் மகன் ஐயா!

மகனே! மகேசனைக் காணவேண்டும், அவன் அருளைப்பெற வேண்டும், அதற்காக ஞானமார்க்கத்தை நாடவேண்டும், என்று, ஏதேதோ கூறினாயே. இந்தக்கதிக்கு ஆளானாயே! ஈவு இரக்கமற்ற இந்தச் செயலைச் செய்தவன் யார்! இலங்கையிலே இருந்து, தப்பி ஓடிவந்த அரக்கன் எவனாவது செய்திருப்பானோ இந்தக்காரியத்தை! மகனே! அருமை மகனே! வெட்டுண்ட உன்தலையை நான், எப்படியடா கண்டு சகிப்பேன்.

தவம் செய்கிறேன், தவம் செய்கிறேன் என்று கூறித், தேகத்தைப் பாழாக்கிக் கொள்கிறாயே, காணும்போதே பெற்றமனம் பகீரென எரிகிறதே, போதுமடா அப்பா, உன் தவம்! இதற்குக் கடவுள் அளிக்கும் அருள் நமக்குப் போதும், எழுந்திரு, சாப்பிடு, உடலைக் கவனித்துக் கொள், என்று சொன்னபோதெல்லாம், ஆசை அதிகமாகக்கொண்டு, அன்னையே! அஞ்ஞானம் பேசுகிறாயே! அவன் அருளைநாட அகோரத் தவம் செய்வது, முறைதானே—நான் தவத்தைக் கைவிடேன்—மகா பாபமாகும் — அதைவிடப் பாபம் தவத்தைத் தடுப்பதும் கெடுப்பதும், என்று, எனக்குப் புத்திமதி கூறினாயே —இந்தக்கதி வந்ததே!

உன் முகத்தைக் கண்டபோது, ஞானஒளி வீசியிருக்குமே — தவத்தின்களையைக்கண்டும், இந்தக்கொலையைச் செய்யத் துணிந்த பாதகன், யார்? யாரடா மகனே? அவன் குருடனா? பகவந்நாமத்தை நீ பஜிப்பதைக் கேட்டும், உன் தலையை வெட்டிய அந்தப்பாவி, செவிடனா? (சூழ வந்திருப்போரைக் கண்டு) ஊமைகளா ஐயா நீங்கள்—யார் செய்த அக்ரமம் இது?

இதோ, பாருங்கள்—என்மகனின் தலை—இது, தருமா, சொல்லடா—சொல்—

ஏன், ஓடுகிறாய், நில்லடா, நில்—எவன் செய்தான்இந்தக்காரியத்தை?

தலையை வெட்டிய பாதகன் யார்?

என் மகனைக் கொன்ற மாபாவி யார்?

தவசியைக் கொன்ற கொடியவன் யார்? — தவசியைக் கொன்றவன் யார்? என் மகனைக் கொன்ற மாபாவி யார்? இரக்கமற்ற அந்தக் கொடியவன் எங்கே இருக்கிறான்—?

ஏடா! மூடா! விறைத்துப் பார்க்கிறாய் பதிலேதும் கூறாமல்! உனக்கு மகன் இல்லையா— அண்ணன், தம்பி, இல்லையா—தவம் செய்து தலையைப் பறிகொடுத்த தனயனின், தாய் நான்! இந்த அநீதி, நடந்திருக்கிறது, அடவியில் அல்ல, அயோத்தியில்! களத்திலே அல்ல, தவத்தலத்திலே நடந்திருக்கிறது.

மகனே! கடவுளை உள்ளன்போடு எண்ணும்போது, கசிந்து கண்ணீர் மல்கும் என்று சொல்வாயே! இது, என்னடா, மகனே! எனதருமை மகனே! — இரத்தமடா, இரத்தம். பெற்றமனம், சும்மா இருக்குமாடா, மகனே! எந்தப் பேயன் செய்தான் இந்தக் காரியம்.

அவனைக் காட்டுங்கள். சிரம் இருபது இருப்பினும், என் இருகரம் போதும். இரக்கமற்ற பேயன், யார்?

யார் அவன்? யார்? எங்கே? எங்கே இருக்கிறான்?

சீக்கிரம் அழைத்துச் செல்லுங்கள்—இன்னும் சிலவிநாடியே என் உயிர் இருக்கும்—அதற்குள் நான் அவனைக் காணவேண்டும் — அவன் என்கண்ணீரைக் காணவேண்டும்—

இதோ இரத்தம் — மகனுடைய இரத்தம், தாயின் கரத்தில்—

ஈவு இரக்கமற்ற அந்தக் கொலைகாரனைக் காட்டுங்கள், அவன் உடலிலே, இந்த இரத்தத்தைப் பூசுகிறேன்—அதுபோதும், அவன் உயிர் போக—

(இராமன் அவ்வழி வர)

யார்? இராமனா! இராமன் அறிவானா, இதனை—இராமா! உன் ஆட்சியிலே, மகனின் வெட்டுண்ட தலை, தாயின் கையிலே! தவசியின் தலை!—சிலையா, நீ—சீற்றம் பிறக்கவில்லையா - கண் திறந்துதானே இருக்கிறது—இதோ, என் மகன் தலை—மாபாவியாரோ, கொன்றுவிட்டான் —பிடி—நீட்டு கரத்தை—என்உயிர் பிரியும் நேரம் இது-நீ தர்மதேவன்-ராஜாராமன் — தவசிகளை ரட்சித்தவன் — தவசிகளை இம்சித்த ராட்சதர்களைச் சம்ஹரித்த ஜெயராமன் — இந்தஅக்ரமத்துக்குத் தக்க தண்டனைதர, உன்னால் முடியும! உன் கடமை அது! மகனே, மாபாவி கொன்றுவிட்டான்—மாதா வயிறெரிந்து கூறுகிறேன், பழிவாங்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்—ராமா! நீ நல்லவன். —சகல கலாவல்லவன்! என்மகனைக் கொன்ற மாபாவியை, மண்டலத்திலே, எங்கு இருப்பினும், தேடிக் கண்டுபிடித்து, அவனுடைய ஈவு இரக்கமற்றநெஞ்சைக் கூறுகூறாக்கிக் காக்கை கழுகுக்கு விருந்திடு. வேண்டாம்! அவைகளின் குணமும்மேலும் கெட்டுவிடும்-மண்ணில் புதைத்துவிடு. இராமா! என் கண்ணீர், என் மகனின் வெட்டுண்ட கழுத்திலிருந்து, ஒழுகும் இரத்தம், இரண்டும், இதோ, உன்கரத்திலே, கலந்து, குழைந்துஇருக்கிறது-பழிக்குப்பழி! அக்ரமக்காரனுக்குத்தக்க தண்டனை! இரக்கமற்றவனுக்கு, ஏற்றதண்டனை அளிக்கவேண்டிய பொறுப்பு உன்னுடையது—என்மகன் தலை—உன் கையில்—நான், உன் காலடியில்—

[அவள்கீழே, உயிரற்றுவீழ்கிறாள். இதற்குள் பணியாட்கள் வந்து கூடுகின்றனர். கறைபட்ட இராமனின் கரத்தைக் கழுவ நீர் கொண்டுவந்து தருகின்றனர். கைகழுவிக்கொண்டே]

இ:- இன்னும் கொஞ்சம் ஜலம். கழுவக் கழுவ....கறை போகக் காணோம்.

பட்டுத்துணிகொண்டு துடைத்தும் பயனில்லை.

எடுத்துச் செல்லுங்கள்.

(தலையையும் தாயின் உடலையும் எடுத்துச்செல்கின்றனர். இராமன் அரண்மனை செல்கிறான்)

6-ம் பக்கத் தொடர்ச்சி

சந்தேகங் கொள்ளவில்லை. ஆனால் அவர் முறையிலுள்ள முரண்பாட்டை, ஆபத்தை, பலாபலனையே எடுத்துக் கூறுகிறோம். சட்டத்தைக் காப்பாற்ற, சென்னை ஆலை வேலை நிறுத்த காலத்தில் தொழிலாளர்களுக்கு விரோதமாக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளையும், கொள்முதல் விஷயத்தில் சட்டத்தை மீறினவர்கள் சம்பந்தமாகக் காட்டப்படும் சலுகையையும் பார்க்கிற பொழுதுதான் நமக்கு ஐயம் தோன்றுகிறது. முன்னையவர் விஷயத்தில் அதிகார பீடத்தில் அமர்ந்திருப்போராகவும், பின்னையவர் சம்பந்தமாய் வெறும் பிரஜையாகவும் நடந்து கொள்வதைப்பார்க்கும் எவருக்கும் நமது வீரனுக்கு வந்த சந்தேகம் வராமல் இருக்காது. எனவேதான் வீரன், இந்தத் திருவோட்டுத் திக்விஜயம் கூடாதென்கிறான், அதுவும் கொள் முதலைப் பெருக்க!

# ★ புத்துலகக் கல்வி ★

[இரா. நெடுஞ்செழியன்]

‘புதியதோர் உலகம் செய்வோம்’ என்ற பேரொலி, உலகப் பொது மன்றங்களிலெல்லாம் இன்று முழங்கப் பெறுகின்றது. மக்கள், தாம் வாழ்வதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்தவும், அச்சூழ்நிலையில் நிலைத்து நிற்கவும், போதிய அறிவும், ஆற்றலும் பெறவேண்டியவர்களாகிறார்கள். மக்களின் அறிவாற்றலைச் செம்மைப் படுத்தும் கருவி கல்வியேயாகும். எனவேதான் “புதியதோர் உலகம் சமைக்கப் புதியதோர் கல்வி முறை தேவை” என்பதை ஆக்ஸ்பர்ட் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சர். ரிச்சர்டு லிவிங்ஸ்டோன் உலகறிய எடுத்தியம்பியுள்ளார்.

அன்றாட நிகழ்ச்சிகளை ஆய்ந்தறிந்து, வாழ்வுக்கேற்ற வண்ணம் அமைத்துக்கொள்ளும் திறமை, இளைஞர்களுக்கு ஏற்படவேண்டும். “முழுவாழ்வு வாழ்வதற்கான வகையில் நம்மைப் பக்குவப்படுத்தும் பண்பு, கல்வியின் நீங்காக்கடமையாகிறது” என்று ஆங்கிலப்பேராசிரியர் ஹெர்பர்ட் ஸ்பென்சர் கூறியுள்ளார். மக்கள் உள்ளம் பண்புபெற, பயிற்சி பெறவேண்டும். அத்தகைய பயிற்சியைக் கல்விதான் அளிக்கும். இன்று, பெரும்பாலான மக்கள் உள்ளங்களில் சூதும், வாதும், வஞ்சமும், பொறாமையும், சுயநலமும் குடிகொண்டிருக்கின்றன. வாழ்விலே ஏழ்மையும், பசியும், பிணியும்வாட்டுகின்றன. இந்த நிலை மாறவேண்டுமானால்,புதிய, நல்ல,தேவையான, பயிற்சியை மக்களுக்குக் கொடுக்க வேண்டும். வாழ்வை வளமாக்கும் புதிய கல்விமுறை வகுக்கப்பட்டாலன்றி, புதியதோர் உலகம் காண இயலாது.

புதுமையுலகு என்றும், புதுமைக் கல்வி என்றும் சொல்லும்போது, புதுமை என்னும் சொல் எப்பொருளைத் தழுவி நிற்கின்றது என்பதை அறியவேண்டும். பழமையினின்றும் வேறுபட்டுக், காலத்தினால்வேறுபாடு உணர்த்தி நிற்பதும் புதுமை என்று சொல்லப்படும்; பயன்பெறும் நெறி குறித்து வேறுபாடு உணர்த்தி நிற்பதும் புதுமை என்று சொல்லப்படும். இங்கு பயன்பெறும் நெறி குறித்துப் புதுமை உணர்த்தி நிற்பதையே ‘புதுமை’ எனக் கொள்கிறோம். வள்ளுவரும், கம்பரும் காலத்தினால் பழமைக்குரியவர்கள்; என்றாலும் கருத்தினால் கம்பரைக் காட்டிலும் வள்ளுவர் புதுமைக்குப் பொருந்தக் கூடியவர். காலத்தினால் பழமையானவை, கருத்தினால் புதுமைக்கு ஏற்குமானால் புதுமையின்பாற் பொருத்தியே கொள்ளப்படும்.

புதிய உலகத்தின் தேவைகளை உணர்ந்து கொண்டால் தான் அதற்கான கல்விமுறை தெளியப்படும். புதிய உலகத்தின் தேவைகளையும், அவற்றில் முக்கியமானவற்றையும் உணரவேண்டும்.

மக்கள் வாழ்வைத் தாங்கி நிற்கும் அரசியலமைப்பு, பொருளாதாரம், வாணிபம், பண்டமாற்று, வெளிநாட்டுத் தொடர்பு, உலகஉறவு ஆகியவை ஒருபுறமும், இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் அறிவியலும் (Science) அதன் விளைவுகளும் மற்றொரு புறமும் வாழ்க்கையின் தேவைகளாக விளங்குகின்றன. இவற்றைச்செம்மையுறப் பயிற்றுவிக்கும் முறையைக் கல்வித்துறை பெற்றிருக்கவேண்டும். அதாவது சமுதாய அறிவியல்களும், (Social Sciences), இயற்கைப் பொருள் அறிவியல்களும் (Natural Sciences). பாடப்பகுதிகளாக அமையும் கல்வி புதிய உலகத்தின் தேவைகளை நிறைவேற்றச் செய்யும்.

மக்களெல்லோரும் இயற்கை ஆற்றல்களின் தன்மையையும், பொருள்களின்மாறும்பண்பினையும்,சாமான்கள் செய்யப்படும் முறையையும், அவற்றைப் பரப்பிவிடும் வகையையும், பொதுச் செயல்களின் அமைப்பையும், அவற்றின் கட்டுப்பாட்டையும், அவற்றில் தமக்குள்ள பங்கையும், நாடுநகர் ஆகியவற்றை ஆளும் முறையையும் ஒருசிறிதாவது அறிந்திருக்க வேண்டியவர்களாகிறார்கள். பொருளாதார வாழ்வையும், சமுதாய பழக்க வழக்கங்களையும் மாற்றவும், அழிக்கவும், வளர்க்கவும் வல்லமையுள்ளஆற்றல்களை (Forces) அறிந்து கொள்ள வேண்டியது மக்களின் இன்றியமையாக்கடனாகிறது. இந்தத் தேவைகளுக்கேற்ற பயிற்சியை அளிக்கும் கல்வி புதிய உலகத்திற்கு ஏற்றதாக அமைகிறது.

மேலே குறிப்பிட்ட சமுதாய அறிவியற்றுறைகள், இயற்கைப்பொருள் அறிவியற்றுறைகள் ஆகியவற்றை, வாழ்க்கையின் தேவைகளாகப் பயிலும் கல்வியில், மதம், மொழிகள், கவின்கலை, இசை, இலக்கியம், வரலாறு போன்றவைகள் வேண்டிய அளவுக்குமேல் இடம் பெறவில்லை. காரணம் இவைகளெல்லாம் மனிதனின் நல்வாழ்வுக்கான தேவை நிறைவேற்றப்பட்ட இடத்திலிருந்து தொடங்கப் பெறுகின்றன. ஆகவேதான், புதியஉலகத்தை உருவாக்கும் கல்விமுறையில் இவைகள் மிகவாகச் சேர்க்கப்படாமல் ஒதுக்கி வைக்க வேண்டிய நிலையை அடைகின்றன. இல்லையாயின் கல்லூரி குழப்பமுண்டாக்கும் கொட்டிலாக மாறும்; உள்ளம் பெரும் பளுவைத்தாங்க முடியாமல் நெளிந்து, வளைந்து, ஓய்ந்து, உட்காரும். இவற்றினால் ஏற்படும் பயன் குறிப்பிட்ட அளவுக்குள்ளாவதால், இவற்றால் குறைந்த அளவு நன்மை ஏற்படுமென்றாலும் அறியவியலாத எல்லையிலும் அறிந்துவிட்டதாகக் கொள்ளப்படும் எண்ணத்தால் துன்பமே மிகவாக ஏற்படுகின்றது. எனவேதான், இன்றியமையாத தேவைகளை நிறைவேற்ற வகுக்கப்படும் கல்வி முறையில், இவைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படவில்லை.

கல்லாதவர்கள் உலகுக்கே பெருங்கேடாகக் காட்சியளிக்கிறார்கள். அவர்களைவிட மிகமிகக் கேடுபயப்பவர்கள் அரைகுறைப் படிப்பாளர்கள். இவர்கள் தங்கள் அரைகுறைக் கல்வியறிவைக் கொண்டு, முற்றும் உணர்ந்தவர்களாகத் தங்களைத் தாங்களே நினைத்துக்கொண்டு செயலாற்றுங்கால் எற்படும் கேடு மிகப் பெரிதாக அமைகிறது. இத்தகையோரின் எண்ணிக்கையைக் குறைக்கும் கடமை, கல்வியைச் சார்ந்ததாகிறது. தேவையான கல்வியறிவைக் கொடுத்தால்மட்டும் போதாது; எந்தக் கல்வியறிவு தேவை என்பதை உணர்த்த வேண்டும். உணர்த்தினால் தான் அவ்வழியே உள்ளம் தானாகச் செல்ல ஏதுவேற்படும்.

அறிவியல் (Science) பொருள்களின் உண்மையை உணர்த்தி,அவற்றின் இயக்கத்தைக்கூறி, அவற்றின் விளைவுகளைக்காட்டி, அவற்றைப் பயன்படுத்தும் வழிகளில் நம்மைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டுச்செல்கிறது. வாழ்க்கைப் பாதையில், நம்மை அழைத்துச்செல்ல வழிகாட்

டியாக அமையும் கல்வி, அறிவியலின் துணையை மிகநெருங்கிப் பெற்றால்தான் பயன்படும் வழிகள் அதற்குத் தெரிய இயலும். ஈராயிர மாண்டுகளாகச் சிறுகச் சிறுக வளர்ந்துவந்த அறிவியல், இற்றைப்பொழுதுமனித வாழ்வின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குகிறது. அறிவியலின் பாகுபாடுகள், பல்வேறு துறைகளில் பொருத்தப் பெற்று, மனிதனின் உழைப்பினைக் குறைத்து, பயனைப் பெருக்கி, இன்பத்தைப் பயந்து வாழ்வை வளமாக்குகின்றன.

ஆத்மீகக் கல்விதான் உலக வாழ்வில் பேரின்பம் பயக்கும் என்றும், அறிவியற் கல்வி அழிவைத்தான் பயக்கும் என்றும் பொதுவாகக் கூறப்படுகின்றன. கீழ்நாட்டைச் சேர்ந்த நம் நாட்டில், இக்கருத்து மேதாவி என்று கருதப்படும் பலராலும்கூடக் கொள்ளப்படுகின்றது. அறிவியற் கல்வியில் மிகவாக அக்கறை காட்டும் நாடுகள்தாம், இன்று உலகில் மேலோங்கி நிற்கின்றன. இந்திய துணைக்கண்டம் சிறிது சிறிதாக முன்னேற்றமடைவதற்குக் காரணம், ஆத்மீகக் கல்வி நிரம்பப் பெற்றிருந்ததினால் அல்ல; பொருத்தப்பெற்ற அறிவியல் (Applied Science) நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாலேயாகும்.

உலகப் பெரும்போர் இரண்டு ஏற்பட்டுப் பேரழிவு பயந்ததற்கு அறிவியலே (Science) காரணம் என்று கூறுவர். அறிவியல் எப்படிப் போரிடலாம் என்பதைச் சொல்லிக் கொடுத்ததேயொழிய, ஏன் போரிட வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்கவில்லை. அறிவியல் அடிமை வேலை செய்யும் வேலைக்காரனேயொழிய, நம்மை ஆட்சி செய்யும் ஆண்டான் அல்ல. அது நச்சுக் காற்றையும், அணுகுண்டையும் ஏந்தியிருப்பது போலவே, பென்சிலின் மருந்தையும், மின்னொளியையும் ஏந்தியிருக்கிறது. அது கொடுக்கிறது; வாங்கும் பொறுப்பு நம்மைச் சார்ந்தது. நாம் அணுகுண்டை விரும்பினால் அறிவியல் அதனைத் தருகிறது. அது அதனுடைய குற்றமல்ல; குற்றம் நம்மைச் சார்ந்தது; காரணம் பொறுக்கிக் கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புதுஉலகில் உலவுவதற்கேற்ற வகையை அறிவியற்றுறைகள் நமக்குச் செய்து தந்தாலும், அவைகள் நம்மை அழைத்துச் செல்ல இயலாத பகுதியும் இருக்கிறது. கல்வி பயிற்றுவிக்க வேண்டியவை—அறிவை வளரச் செய்தல், உள்ளத்தை விரிவாக்குதல், உள்ளத்தை அவாவுறச் செய்தல், புது உலகத்திற்குத் தேவையான தொழில் நுட்பங்களை அறியச் செய்தல் ஆகும். இவையெல்லாம் அறிந்த பிறகுங்கூட மனித வாழ்வு இன்பபுரியின் வாயற்படியை எட்டிப் பார்க்குமா என்பது ஐயப்பாடாக இருக்கின்றது. வாழ்வுக்கு தேவையான பொருளாதாரம், அறிவியல், தொழில் நுட்பங்கள், அமைப்புகள் ஆகியவை பண்பட்டாலும், மக்கள் பண்பட வேண்டியிருக்கிறது. மக்கள் ஆணவம், ஆணை, அணுகுண்டு ஆகியவற்றால் ஆளப்படுவதா, அல்லது அன்பு, அழகு, பகுத்தறிவு ஆகியவற்றால் ஆளப்படுவதா என்பதை முடிவு செய்யவேண்டும்.

எவ்வளவுக் கெவ்வளவு அறிவியல் நமக்கு ஆற்றலைக் கொடுக்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு நாம் நன்மையையும் செய்யமுடியும். தீமையையும் பயக்க முடியும். ஏழை மனிதனும், அவனைப் போன்றோர் நிரம்பியஏழ்மை உலகும் வறுமையின் வரம்புக்கு உட்பட்டிருப்பதால், குறைந்த அளவு தீமையைத்தான் தம் ஆற்றலால் செய்யஇயலுகிறது; ஆனால் சொத்து ஏற ஏறத் தீமை பயக்கும் அளவும் ஏறுகிறது. நம்மிடத்தில் இயற்கை அளித்திருக்கும் ஆற்றல் தீமையைச் செய்யவும் பயன்படுத்தப்படுவதால், நாம் விரும்பும் கல்வி ஆற்றலை எப்படிச் செயற்படுத்துவது என்பதைக் கற்றுக் கொடுப்பதோடல்லாமல், எப்படி நல்ல வழியில் செயற்படுத்துவது என்பதையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

மக்கள் நல்ல வழியில் செல்லப் பெருந்தன்மை உள்ளத்தில் குடிபேற வேண்டும். பெருந்தன்மை ஏற்படக், காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து அறிஞர்கள் காட்டிய பெருஞ்செயல்களும், கண்ட கனவுகளும் மாணவர்கள் முன்நிறுத்தப்பட வேண்டும். காலத்திற்கும், கருத்திற்கும் ஒவ்வா மூடக்கட்டுக்கதைகளும் குருட்டு நம்பிக்கைகளும் ஒழிந்த, பகுத்தறிவு செய்து காட்டியபெருஞ்செயல்கள் உணர்த்தப்பட வேண்டும். பெருஞ்செயல்களை வரலாற்றிலிருந்தும், பெருங்கனவுகளை இலக்கியத்தினின்றும் கொழித்து எடுத்துப் பாடமாக்கப்பட வேண்டும். அவற்றைப் பாடமாக்கினால் உள்ளம் பண்படும்; பெருந்தன்மை பெறும். எண்ணும் பொழுதும், சொல்லும் பொழுதும், செயலாற்றும் பொழுதும் பகுத்தறிவின் பாற்பட்ட பெருந்தன்மை விளங்க வேண்டும். வெறியையுண்டாக்கும் மதவுணர்வும் அறிவை அடகுவைக்கச் செய்யும் பொய்ப்புராணக் கதைகளும், பகுத்தறிவை அழிக்கும் காவியக்கதைகளும், இவைபற்றிய வரலாறுகளும் பெருந்தன்மையைப் பயக்கா; பயந்ததில்லை.

பெருந்தன்மைப் பண்பு நடுவே நிறுத்தப்பட்டு அவற்றைச் சுற்றி வாழ்க்கையின் தேவைகளை நிறைவேற்றும் துறைகள் இணைக்கப்பட்டால், வாழ்வு வளமுறும். அறிவியல் இணைக்கப்படும்போது அறிவு வளரும், உலகம் மனிதன் ஆளுகைக்குக் கட்டுப்படும். அரசியலும், பொருளியலும் இணைக்கப்பட்டால் நல்வாழ்வு நடத்துவதற்கேற்றபடி சமுதாயத்தை உருவாக்கவும், உயர்வடையச் செய்யவும் இயலும். மொழிகள் இணைக்கப்பட்டால் ஒரு இனம் மற்றோர் இனத்தோடுகலந்து ஒன்றாகவும், உலகப்பொது அறிவு வளரவும் பயன்படும். கைத்தொழிலும், பண்ட மாற்றும் இணைக்கப்படும்போது மனித சமுதாயத்தின் அவசியங்கள் நிறைவேற்றப்படும். இவற்றையெல்லாம் மக்கள் எல்லோர்க்கும் கொடுக்கும் வாய்ப்பை உண்டாக்கும் கல்விமுறை ஏற்பட்டால், புதியதோர் உலகை உருவாக்க ஏதுவாகும்; அப்பொழுது "புதியதோர் உலகம் செய்தோம்" என்று குன்றின் மீது நின்று முழங்கலாம்! வாழ்வு, அன்பு, அழகு, அறிவால் எழில்பெற்று விளங்கும்!


## தேவை!

'நியு ஜஸ்டிஸ்' ஆங்கில வார வெளியீட்டுக்கு, ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களில் முன்பணம் செலுத்தி ஏஜென்ஸி எடுக்கக்கூடிய அன்பர்கள் நிபந்தனைகளுக்காகக், கீழ்க்கண்ட முகவரிக்கு, மனுச் செய்யவும்.

Dr. C. Ganesan.
193: Mint Street;
G. T. Madras. — 1.

# திருவோட்டுத் திக்விஜயம்!

"ஏண்டா வீரா! இவ்வளவு இரைக்க இரைக்க ஓடிவருகிறாய்? என்ன சேதி கொண்டு வந்திருக்கிறாய்? என்னமோ மந்திரியார் வருகிறார், கூட்டமாம்—பார்க்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனாயே? கூட்டம் முடிந்துவிட்டதா? மந்திரியார் என்ன சொன்னார்?" என்று நான் கேட்டேன்.

"நல்லா சொன்னாரு சொரக்காயிக்கு உப்பு இல்லேண்ணு. இப்படிண்ணு தெரிஞ்சிருந்தா போய்கூட இருக்கமாட்டேனுங்க" என்றான் வீரன்.

"ஏண்டா இவ்வளவு சலிப்பாகப் பேசுகிறாய்? என்னடா அங்கு நடந்துவிட்டது, உனக்கே சலிப்பு ஏற்படுகிற மாதிரி?"

"ஏங்க அந்த வெட்கக்கேட்டை கேக்கிறீங்க?"

"சரிடா! விஷயத்தைச் சொல்லுடா!"

"சரி சொல்லட்டுங்களா?"

"சொல்லித் தொலையேண்டா?"

"நல்ல கூட்டங்க! என்னடா இது, இவ்வளவு கூட்டமா இருக்குதேண்ணு பாத்தேனுங்க! முட்டி மொரண்டி கும்பலுக்குள்ளார நொழஞ்சுட்டனுங்க. பாத்தா, பாபம்; ஒருகெழவி, கண்ணு போனது, கையில்லாதது, வாயற்றது, உடல் வீங்கிப்போனதுமாக நாலு சின்ன சின்ன பசங்களை காட்டி, கையிலிருந்த திருவோட்டை நீட்டிப் பிச்சை கேட்டுகிட்டு இருந்தாளுங்க........!"

"ஏண்டா நான் என்னா கேட்டேன், நீ என்ன சொல்றே?"

"இருங்களேன்! கொஞ்சம் பொறுமை காட்டுங்களேன்!"

"இது எங்க நடந்ததுண்ணு நெனைக்கிறீங்க, எல்லாம் நம்மசேட்டு வட்டிக்கடை முன்னாலேதானுங்க. கெழவியின் உருவமும், அவளுடைய அழுகொரலும், அந்த பசங்களினுடைய கோரமும் பார்க்க சகிக்கலேங்க. இதுக்கென்ன, சேட்டா அசஞ்சிகொடுத்துடறவரு? பணமுண்ணு வர்ர ஏழைங்களுக்கு, அவங்க கொண்டு வர்ர பொருள்களை வாங்கி வெச்சிகினு, வழக்கம்போல் உதவி பண்ணிக்கிட்டு இருந்தாருங்க! என்னைப்போல இருந்ததுங்க, அந்தக் கெழவியின் அவஸ்தையைப் பார்த்து, காலணா அரையணா போட்டுதுங்க. பெரிய பண்ணை போட்டாரு அந்தப்பக்கம் வந்ததுங்க. வழியிலே ஓரே கூட்டமாக இருக்கவே, கார் போக வழிகிடைக்கலிங்கோ. ஓரே கோபமா டிரைவரை மொரச்சி பாத்தாருங்க ஐயா. விஷயத்தை கூட்டத்திலெ இருந்த ஒருத்தர் சொன்னாருங்க. குளங்குட்டை கிடைக்கலயா இதுங்களுக்கு விழுந்து சாகண்ணு சொல்லிவிட்டு போயிட்டாரு. உடனே ஒரு போலீஸ் காரு வந்தாருங்க, ஒரு அதட்டுப் போட்டாரு, கெழவி, பசங்களோடே போயே போயிட்டாளுங்க."

"ஐயோ பாபம்!"

"அந்தக் காட்சி இன்னமும் எங் கண் முன்னாலேயே நடக்கிறது போல இருக்குதுங்க."

"ஆமாம்! இவ்வளவுதானா சங்கதி? இதற்கு ஏன், அவசர அவசரமா ஓடிவந்தே?"

"மனசை ஒரு வழியா திடப்படுத்திகிட்டு, கூட்டத்துக்குப் போனனுங்க. மந்திரி வந்தாருங்க. நல்ல மனுஷருங்க. கொடியைப் பறக்க விட்டாருங்க. பெரிய பண்ணைதானுங்க கூட்டத்துக்குத் தலைவரா இருந்தாருங்க. அவரை, கருணாமூர்த்திண்ணு கூடப் புகழ்ந்து சொன்னாங்க சிலர். மந்திரியார் பேச ஆரம்பித்தாருங்க. 'நாட்டிலே அரிசிக்கு ஆபத்து வரும்போல இருக்குது. எதிர்பார்த்தபடி நெல் கொள்முதல் செய்யமுடியலை. கொறைச்ச வெலைக்கு விற்க யாரும் முன்வரலை. அதுக்காக விற்க முன் வருகிறவங்களுக்கு இனாம் தொகை, நெல்லை அளந்த உடனே கைமேலேயே அப்பவே கொடுத்துடப்படும். எனவே, பட்டினியாலே ஜனங்க சாகாமே காப்பாத்த, கையிருப்பா நெல் வைச்சிருக்கிறவங்க கொடுக்க முன்வரணும். சட்ட சபையிலே இருக்கிறவங்களுக்குத்தான் இதைமுக்கியமாகச் சொல்லுகிறேன்' என்று சொன்னாருங்க, அவ்வளவுதான், பாருங்களேன், ஐயாயிரம் மூட்டைக்கு மேலே உடனே கொடுக்கிறதாகப் பெரிய பண்ணை சத்தியம் பண்ணிட்டாரு கூட்டத்திலேயே. அவரைப்போலவே இருக்கிறவங்களெல்லாம், பஞ்சத்தை வரவிடாமே பாத்துக்கிறோமெண்ணு மார்தட்டி சொல்லிட்டாங்க. அவ்வளவுதான், மந்திரியாரும் வேற ஒரு ஊருக்கு போயிட்டாரு.

"இவ்வளவுதான் நடந்துதா? அதுக்காக ஏண்டா நீ, பெருமூச்சு வாங்க ஓடிவந்தே?"

"சொல்லமாட்டேனுங்களா!"

"சொல்லு சொல்லு!"

"கூட்டத்த பாத்து, மந்திரியார் பேசினதைக் கேட்டதும் ஒரு சந்தேகம் வந்துட்டுதுங்க எனக்கு!"

"என்னடா சந்தேகம் அது?"

"அதுங்களா? அதாவது இவரு மந்திரியா இருந்துக்கிட்டு, தெனம் தெனம் ஊர் ஊராப் போய், கூட்டம் கூட்டி, பஞ்சத்தைபத்தி எப்படி எப்படியோ பேசி, நெல் வாங்கிறாரேண்ணுதானுங்க சந்தேகம்?"

"இதனாலே என்னடா உனக்கு சந்தேகம் வந்துடுத்து? பொதுஜன மந்திரிகள் இம்படித்தான் நடந்துகொள்வாங்க!"

"அப்படியானா, அந்தக்கெழவி மந்திரியாவதை நான் ஸ்டாங்கா ஆதரிக்கிறனுங்க!"

"போடா! அதிகப்பிரசங்கி! பெரிய யிடத்துச் சங்கதி அப்படியெல்லாம் சொல்லாதே! பாது காப்புச் சட்டம் இருப்பது உனக்கு எங்கு தெரியப் போகிறது?"

* * *

நமது மாகாணத்தில் ஐந்து கோடி மக்களுக்கு மேல் உள்ளனர். அவர்களுக்கு ஆன உணவை அளிக்கவேண்டும். இங்குஉற்பத்தியாவதோ போதியதாக இல்லை. எனவே பிற மாகாணங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் எதிர் பார்க்கவேண்டியதாக இருக்கிறது, வெளிநாடுகளில் வாங்கப்படும் உணவுப் பொருட்களுக்கு, உள்நாட்டில் கொடுப்பதைக்காட்டிலும், அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி இருக்கிறது. கூடுதலான விலைக்கு வாங்கியும், அதனை இங்கு கொண்டுவந்து சேர்ப்பதிலும், கப்பல் வசதியின்மையால் அதிகக் கஷ்

டமாகிறது. பணச்செலவு கூடின போதிலும், அதற்கான பண்டங்கள் கிடைப்பது கஷ்டமாகிறது. எனவே மக்கள் உணவு நெருக்கடியால் திண்டாட வேண்டி இருக்கிறது. தேவைக்குக் குறைவாக உண்ணவேண்டி இருக்கிறது.

நமது மாகாணத்தில் ஏற்கெனவே நபர் ஒன்றுக்கு 10 அவுன்ஸ் உணவு ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் 13-7-47லிருந்து 8 அவுன்சாகக் குறைக்கப்பட்டு விட்டது. ஆண்டு ஒன்றுக்கு 1787600 டன் உணவுப் பொருள் சேகரிக்கக் கூடுமென கணக்கிடப்பட்டிருந்தது. மே மாதம் முடிய 913479 டன்தான் பெற முடிந்தது. சேகரிக்க வேண்டியது 874121 டன்னாகும். இதில் ஏறினது 80 சத விகிதம், அதாவது 659300டன் தான் இந்தப்பருவ ஆண்டிற்குள் சேகரிக்க முடியும் என நம்பப்பட்டது.

ஜூன் முதல் தேதியில் நமது மாகாண சர்க்கார் கைவசமிருந்தது 241216 டன் தானியமாகும். வெளிநாட்டிலிருந்து 50000 டன் எதிர்பார்க்கப்பட்டது. அதிக பட்சம் கொள்முதல் செய்வதானாலும் 699300 டன்னுக்குமேல் முடியப் போவதில்லை. நபர் ஒன்றுக்கு 10 அவுன்ஸ் வீதம் கணக்கிட்டால், 31—10—47 முடிய சர்க்கார் வசம் 850000 டன் இருந்தாகவேண்டும். மேலும் அக்டோபர் முடிவில்செலவு போக 250000 டன் கையிருப்பாக வேறு வைத்திருக்க வேண்டும். இவைகள் அனைத்தையும் கணக்கிட்டுப் பார்க்கிறபொழுது மொத்தத்தில் 109484 டன் துண்டு விழுகிறது.

மார்ச் மாதத்தில் ஓமந்தூரார் மந்திரிசபை அதிகாரத்திற்கு வந்தது. வந்தவுடன், உணவு பங்கீடு 12 அவுன்சுக்கு உயர்த்தப்படுமென ஒரு மந்திரியார் கூறினார். ஆனால் உயர்வு கிடைக்கவில்லை. இருக்கும் அளவையும் காப்பாற்றவில்லை. 2 அவுன்ஸ் குறைக்கப்பட்டது.

ஏன் இந்தக்கீழ்நிலை சம்பவித்தது? வெள்ளத்தால் விளைவு குறைந்ததா? பருவமழையின்மையால் பயிர் பாழாகிவிட்டதா? அதுஒன்றுமில்லை. உற்பத்தி குறைந்துவிடவில்லை. பின் ஏன் உணவு முட்டு?

சர்க்கார் கொள்முதல் செய்வதில் தான் குறை இருக்கிறது. அதிகாரிகளின் கவலைக்குறைவு. கொள்முதல் செய்வதற்கு என அரசியலார் உண்டாக்கிய சாதனம், பயனற்றுப் போய்விட்டது. பணஆசை பிடித்த பதுக்கல்காரர்கள் விற்க முன்வரவில்லை. கள்ளமார்க்கட்டைப் பெருக்கிப் பணவேட்டையாடினர். இவ்வளவையும் கண்டும் காணாததும் போல அதிகாரிகள் கடமையிலிருந்து தவறினர். இவை நமது குற்றச்சாட்டு அல்ல. மந்திரிகள் அனைவரும் ஏகோபித்துக் கூறும் குறைபாடுகள்.

இதற்கு முன்பிருந்த பிரகாசத்தின் கோணல் கொள்முதல் திட்டம் நல்ல பலன் தரவில்லையென, அதனை மாற்றி அமைத்தது ஓமந்தூரார் மந்திரிசபை. கொள்முதல் செய்யும் பொறுப்பை நெல் அரைக்கும் மில்காரர்களிடம் ஒப்படைத்தது, நண்டைச் சுட்டு நரியைக் காவல்வைத்த கதையாக முடிந்தது. பதுக்கல்காரர்கள், கங்காணிகளிடமே உணவு ஒப்படைக்கப்பட்டது. கொள்முதல் முன்னிலும் வீழ்ச்சியுற்றது. 8 அவுன்ஸ் அளவிற்குப் பங்கீடு செய்யவேண்டியதாயிற்று. அதற்கும் ஆபத்து ஏற்படுமெனவும், வங்கத்தைக் காட்டி மக்களுக்குப்பீதியை உண்டாக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

மந்திரிகள், சர்க்கார் காரியாலய அதிகாரிகள், ஜில்லா அதிகாரிகள், பங்கீடு அதிகாரிகள்-ஏன்-சகல சர்க்கார் அதிகாரிகளும் ஊர் ஊராகச் சென்று, பல்லைக்காட்டிக் கெஞ்ச வேண்டியதாக இருக்கிறது. உணவு நெருக்கடியைக் காட்டி நிகண்டும், பஞ்சத்தின் கொடுமையை விளக்கிப் பாசுரமும், வங்கத்தின்விளைவு பற்றி வெண்பாவும், மக்கள் அழிந்து விடுவதால் மிராஸ்தாரர்களுக்கு ஏற்படும் அபாயத்தைப்பற்றி அந்தாதியும் பாடிவருகிறார்கள் அமைச்சர்கள்.

வரவிருக்கும் ஆபத்தை, நயத்தாலோ பயத்தாலோ இவர்கள் போக்கட்டும். நமக்கு மகிழ்ச்சிதான். ஆனால் இன்று கொள்முதலை அதிகமாக்க அமைச்சர்கள் எடுத்துக் கொள்ளும் முறை, விரும்பக்கூடியதுதானா என்பது சிந்திக்கக் கூடிய விஷயம்.

குறைந்தது இனியும் நான்கு ஐந்து ஆண்டுகட்கு இந்த உணவு நெருக்கடி தீரப்போவதில்லை. உணவுக்கு நெருக்கடி ஏற்பட்டதும் இயற்கையின் கோளாறினால் அல்ல. அதிக விலைவேண்டுமென்ற காரணத்திற்காகவே, பெருநிலக்கிழார்கள் இந்த ஆபத்தான நிலையை உண்டாக்கி இருக்கிறார்கள். அவர்கள் விருப்பப்படி அதிக விலை கொடுப்பதை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ள மறுப்பதால், இனாம் தொகையைக் கொடுத்துக் கொள்முதல் செய்யப்படுகிறது. மாகாண உரிமையில் இந்திய சர்க்கார் தலையிடும் உரிமை கூடாது என்பது நமக்கு உயிரான கொள்கை. இருந்தாலும் பிரஸ்தாப விஷயத்தில், விலை கூடுதலாகக்கொடுத்துக்கொள்முதல் செய்வது விரும்பக்கூடியதல்ல. இனாம் கொடுப்பதும் லஞ்சம் கொடுப்பதற்கு ஒப்பானதாகும். மேலும் நெருக்கடியை உண்டாக்கினால், மேலும் கொஞ்சம் கூடுதலாக போனஸ் பெறலாம் எனும் நம்பிக்கையையும் ஆசையையும் பெருநிலக்

(5ம் பக்கம் பார்க்க)

## ஆண்டுவிழா.

23-8-47ல் தேவி நாடக சபையாரின் முதலாண்டு விழா, கும்பகோணத்தில், நகைச்சுவையரசு, கலைவாணர் தோழர் N. S. கிருஷ்ணன் தலைமையில் நடந்தபோது, காட்சி ஜோடனைகள், விளக்கு அலங்காரம் நடிகர் நடிப்புத் திறமை, இசையின் பெருமை முதலியவற்றை மிக முக்யமாகக் கவனிக்கப்பட்டு வந்த காலம் மாறி, இப்போது சீர்திருத்தம் முன்னேற்றம் முதலிய அரிய கருத்துக்களைக் கொண்ட நாடகங்களையே மக்கள் பெரிதும் விரும்புகின்றனர் என்றும், சிறைச்சாலையில் உள்ள கைதிகளைக் கூட நல்லகருத்துக்களைக் கொண்டநாடகங்களை நடிக்கச் செய்தால் அவர்கள் மனம் மாறி நல்வழிப்படுவார்களென்றும், காங்கிரசார் அப்படிச் செய்யவேண்டியது அதிக அவசியமென்றும் பேசினர்.

ஷை நாடகசபைத்தலைவர் தோழர் K. N. இரத்தினத்தின் கலைத் தொண்டைப் பாராட்டிப் பல கழகங்கள் வாழ்த்துத் தாள்கள் வாசித்தன.

தோழர் K. N. இரத்தினம் எல்லோருக்கும் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press,
817—819 Hodgsonpet Conjeeveram.